Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror


www.tamilmirror.lk

THURSDAY, AUGUST 11, 2022

முயற்சியினால்தான் மகவான் (இந்திரன்) தேவர்களுக்குத் தலைவனானான்; முயற்சி போற்றிப் புகழப்படுகிறது; முயற்சியின்மை இகழப்படுகிறது. (தர்ம போதனை)

வியாழக்கிழமை ஒகஸ்ட் 11, 2022 | ஒளி: 06 கதிர் 73 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# தாய்லாந்து பறக்கிறார் கோட்டாபய



சிங்கப்பூரில் தங்கியிருக்கும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தனது மனைவியுடன் தாய்லாந்துக்கு செல்லவுள்ளார் என்றும் ரொய்ட்டர் செய்தி சேவை செய்து வெளியிட்டுள்ளது. அச்செய்தியின் பிரகாரம் கோட்டாபய ராஜபக்ஷ, இன்று (11) தாய்லாந்துக்கு பயணமாகவுள்ளார்.

தொடர்ச்சி P2

## 1,321 பேர் கைது

எரிபொருள் பதுக்கல் மற்றும் விற்பனை தொடர்பாக நேற்று முன்தினம் வரையில் 1,387 சோதனைகளை முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் இந்த சோதனைகளில் 1,321 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இந்த சுற்றிவளைப்புகளில் 44,777 லீற்றர் பெட்ரோல், 155,502 லீற்றர் டீசல் மற்றும் 20,028 லீற்றர் மண்ணெண்ணெய் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.



காலிமுகத்திடல் போராட்டக்காரர்களால்

## 4 ரிட் மனுக்களும் வாபஸ் அங்கிருந்தும் வெளியேறினர்

காலி முகத்திடலில் போராட்டக்காரர்கள் வெளியேறுவதற்கு பொலிஸார் மேற்கொண்ட உத்தரவை இடைநிறுத்துமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நான்கு ரிட் மனுக்கள் விண்ணப்பதாரர்களால் வாபஸ் பெறப்பட்டுள்ளன.

போராட்டக்காரர்களின் சார்பில் நீதிமன்றத்தில் நேற்று (10) ஆஜராகியிருந்த சட்டத்தரணிகள் அந்த நான்கு ரிட் மனுக்களை வாபஸ் பெற்றுக்கொண்டுள்ளனர்.

தொடர்ச்சி P2




## இரு வைரஸ்களும் நுரையீரலை தாக்குகின்றன

இலங்கையில் தற்போது பரவிவரும் BA.4 மற்றும் BA.5 கொரோனா வைரஸ்கள் மிகவும் ஆபத்தானவை, இவ் வைரஸ்களானது தொற்றாளர்களின் நுரையீரலில் பாதிப்பை ஏற்படுத்தும் என ஜான் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் வளவாளரும், ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்றுநோய்கள் மற்றும் கொவிட் வைரஸ் தொடர்பான வைத்திய ஆலோசகர் வைத்தியர் சஞ்சய் பெரேரா தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## ஜெனீவாவை கையாள அரசாங்கம் புதிய வியூகம்

எதிர்வரும் ஜெனீவா மனித உரிமைகள் கூட்டத்தொடரில் இலங்கை எதிர்கொள்ளும் நெருக்கடிகளை சமாளிக்கும் விதமாக மனித உரிமைகளைப் பாதுகாத்தல், நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புதல் தொடர்பிலான உரிய நிறுவனங்களால் ஒன்றிணைந்த ஒரு பொதுவான பொறிமுறையை தயாரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அவ்வாறு தயாரிக்கப்படும் அறிக்கையே இம்முறை இலங்கை சார்பில் முன்வைக்கப்படவுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## பயணத்தடை நீடிப்பு

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, ஆகியோருக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த பயணத்தடை செப்டெம்பர் 5 ஆம் திகதி வரையிலும் உயர்நீதிமன்றத்தால் நீடிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு இவ்விருவரும் பிரதான காரணகர்த்தாக்கல் எனத் தெரிவித்து தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுக்களை விசாரணைக்கு நேற்று (10) எடுத்த போதே, நீதிமன்றம் மேற்கண்டவாறு பயணத்தடையை நீடித்துள்ளது,

## பேச்சில் மாத்திரமல்ல செயலிலும் வெளிப்படுத்துகின்றோம்



நாட்டின் சட்டம் ஒழுங்கை உறுதிப்படுத்தாது நாட்டின் ஜனநாயக பயணத்தை முன்னெடுக்க முடியாது. நாம் எமது வேலைத்திட்டங்களை பேச்சில் மாத்திரம் அன்றி செயலில் அதனை முன்னெடுக்கின்றோம் என பிரதமர் தினேஸ் குணவர்தன சபையில் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## கொட்டாஞ்சேனை கொள்ளை: 2 பெண்கள் உட்பட 4 பேர் கைது

கொழும்பு, கொட்டாஞ்சேனை- சென் பெனடிக் வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் 1 கோடி ரூபாய் பெறுமதியான நகைகள் மற்றும் பணம் கொள்ளையிடப்பட்டமை தொடர்பில் நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

டைல்ஸ் வர்த்தகத்தில் ஈடுபடும் குறித்த வர்த்தகரின் வீட்டுக்குள் ஒகஸ்ட் 8 ஆம் திகதியன்று பொலிஸார் என தங்களை அடையாளப்படுத்திக்கொண்டு வீட்டுக்குள் உள்நுழைந்த இருவர், வீட்டு உரிமையாளரின் தலையில் துப்பாக்கியை வைத்து மிரட்டி,

தொடர்ச்சி P2



## மக்களின் பிரச்சினைகளை ரணில் தீர்க்கவில்லை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான் பதவியேற்ற காலம் முதல் இதுவரையில் தனக்கு உதவிய எம். பிக்களின பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளாரே தவிர, மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக வேலைத்திட்டத்தை முன்வைத்ததாக தெரியவில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சுயாதீன குழு எம். பியான டலஸ் அழகப்பெரும சபையில் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## புதிய கூட்டணி உதயமாகிறது

### பெயர் 21ஆம் திகதி அறிவிப்பு

ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான கூட்டணியிலிருந்து வெளியேறிய பங்காளிக் கட்சிகள் இணைந்து புதியதோர் அரசியல் கூட்டணியை உருவாக்கவுள்ளதாகவும், இந்த கூட்டணியின் அங்குரார்ப்பண நிகழ்வு எதிர்வரும் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ளது எனவும் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.



இவ்வாறு அமைக்கப்படும் கூட்டணியின் பெயர் உள்ளிட்ட விபரங்கள் 21ஆம் திகதி அறிவிக்கப்படும் எனவும், விமல் வீரவன்ச எம். பி தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி, வாசுதேவ நாணயக்கார எம்.

தொடர்ச்சி P2




## "22 "ஆம் திருத்தம் சபையில் சமர்ப்பிப்பு

எதிர்கட்சியினால் முன்வைக்கப்பட்ட அரசியலமைப்பின் 21 ஆவது திருத்த யோசனையை செயற்படுத்த தடைகள் உள்ளதாக சபாநாயகர் அறிவித்ததை அடுத்து, அரசியலமைப்பின் 22 ஆவது திருத்த சட்டமூலம் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவினால் நேற்று (10) சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.


தொடர்ச்சி P2

## தேநீர் உபசார கட்டணத்தை செலுத்தினார் ரணில்

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால், ஒகஸ்ட் 3 ஆம் திகதியன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மிகவும் எளிமையான முறையில் நடைபெற்ற ஆரம்ப வைபவத்துக்குப் பின்னர், அக்கிராசன உரையை ஜனாதிபதி ஆற்றினார்.

அதன்பின்னர், பாராளுமன்றத்தில் தேநீர் உபசாரம் வழங்கப்பட்டது. அதற்கு 2 இலட்சத்துக்கு 72 ஆயிரம் ரூபாய் செலவானது. அதற்கான கட்டணத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது சொந்த நிதியில் செலுத்தியுள்ளார். ஜனாதிபதி விக்ரமசிங்கவின் சார்பில் பாராளுமன்ற விவகாரங்கள் தொடர்பான ஜனாதிபதியின் செயலாளரான ஆஷு மாரசிங்க இதற்கான கட்டணத்தை செலுத்தியுள்ளார்.



MEMBERS' RESTAURANT

NAME: Cash
SERVER
DATE: 03/08/2022

| DESCRIPTION | QTY | RATE | AMOUNT |
|---|---|---|---|
| Ceremonial opening of the third session of the ninth Parliament | | | |
| Milk rice / Snacks and Tea | 400 | 680 00 | 272000 00 |

MR No. 80430 TOTAL 272000 00

SIGNATURE: [signature]
NAME: Prof Ashu Marasinghe



## மண்ணெண்ணெய் விலையில் திருத்தம்

எதிர்வரும் 19ஆம் திகதிக்கு பின்னர் மண்ணெண்ணெய் முறையாக விநியோகிக்கப்படும் என்றும், விலையை 87 ரூபாவிலிருந்து மாற்றியமைப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதால், மண்ணெண்ணெய் விலையும் திருத்தம் செய்யப்படும் என மின்சக்தி மற்றும் எரி சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர சபையில் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# தாய்லாந்து பறக்கிறார் கோட்டாபய

இலங்கையில் ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ, ஆகியோரின் ஆட்சியில், வரலாறு காணாத பொருளாதார நெருக்கடி நாட்டில் ஏற்பட்டது.

அத்தியாவசியப் பொருட்கள், எரிபொருட்கள் என அத்தனைக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டது. இலங்கையில் அனைத்து பொருட்களின் விலைகளும் விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்தன. இதனால் இலங்கையில் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாக நாசமாகிப் போனது.

இந்த பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காண கோரி இலங்கை மக்கள் தன்னெழுச்சியான கிளர்ச்சிகளை முன்னெடுத்தனர். இலங்கை தலைநகர் கொழும்பின் காலி முகத்திடலில் இந்த கிளர்ச்சி மையம் கொண்டிருந்தது. போராட்டங்கள் உச்சமடைந்தமையால், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பதவியை துறந்தார். அதன்பின்னர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பதவியைத்துறந்து மாலைதீவுக்கு தப்பியோடி தஞ்சமடைந்தார். அதன்பின்னர், அங்கிருந்து சிங்கபூருக்குச் சென்றிருந்தார்.

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு, தாய்லாந்து அகதியாக அடைக்கலம் தர முடிவு செய்துள்ளதாகவும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 4 ரிட் மனுக்களும் வாபஸ் அங்கிருந்தும் வெளியேறினர்

அரசாங்கத்தை எதிர்த்து காலிமுகத்திடலில் கடந்த 125 நாட்களாக போராட்டத்தில் ஈடுபட்ட காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் அங்கிருந்து வெளியேறிவிட்டனர்.

இந்நிலையில், காலி முகத்திடலில் இருந்து தாங்கள் வெளியேறினாலும், வெவ்வேறு மாற்று வழிகளில் போராட்டம் தொடரும் என போராட்டத்தின் ஓர் அங்கமாக இருந்த சட்டத்தரணி மனோஜ் நாணயக்கார தெரிவித்துள்ளார்.

காலி முகத்திடலில் நேற்று (10) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். போராட்டக்காரர்கள் பிரதேசத்தை விட்டு வெளியேறுவது போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவராது. முழு இலங்கையர்களையும் ஒன்றுபடுத்தி முன்னோக்கி கொண்டு செல்லப்படும், நாடளாவிய ரீதியில் உரிய முறையில் போராட்டம் தொடரும் என்றார்.

## இரு வைரஸ்களும் நுரையீரலை தாக்குகின்றன

இலங்கையில் தற்போது பரவி வரும் BA.4 மற்றும் BA.5 கொவிட் -19 வைரஸ் தொற்றுகள் நுரையீரல் பாதிப்பை ஏற்படுத்துவதாக கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள கொவிட் வைரஸ்களில் மிகவும் வேகமாக பரவும் வைரஸாகும் என தெரிவித்துள்ள வைத்தியர் சஞ்சய் பெரேரா, ஐரோப்பாவிலும் ஆப்பிரிக்காவிலும் இந்த வைரஸ்கள் மிக வேகமாக பரவுகின்றன என்றார்.

தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்வது ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான செயற்பாடாகும். அதேபோல் சுகாதார வழிமுறைகளை பின்பற்றுவதும் மிகவும் அவசியமானது. நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மீண்டும் வைரஸ் பரவ ஆரம்பிக்குமாயின் மிக மோசமான தாக்கங்களை மக்கள் முகங்கொடுக்க நேரிடும் என்றார்.

## ஜெனீவாவை...

எதிர்வரும் செப்டெம்பரில் கூடவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கை குறித்து கவனம் செலுத்தப்படவுள்ள நிலையில், அமர்வை எதிர்கொள்ள இலங்கையிலிருந்து அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது. இலங்கையில் மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் நல்லிணக்கம் முன்நகர்வு நடவடிக்கைகளில் அவற்றை தேசிய ரீதியில் முன்னெடுக்கும் நிறுவனங்களுடன் கலந்துரையாடியுள்ளோம். மனித உரிமைகளைப் பாதுகாத்தல், நல்லிணக்கத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புதல் உள்ளிட்ட செயற்பாடுகளில் அவற்றுக்கு பொறுப்பான அந்தந்த நிறுவனங்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்தும், எதிர்காலத்தில் இந்த நிறுவனங்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது குறித்தும் ஒரு வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என அமைச்சர் விஜயதாஸ ராஜபக் தெரிவித்தார்.

அதேபோல் இம்முறை ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை முன்வைக்கும் அறிக்கையானது, இந்த நிறுவனங்கள் சகலதும் ஒன்றிணைந்து தயாரிக்கும் ஒரு பொறிமுறையை அடிப்படையாக கொண்ட அறிக்கையேயாகவும். இப்போதும் நீதி அமைச்சு பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்துள்ள நிலையில், அவற்றையும் உள்ளடக்கியதும் அடுத்து வரும் காலங்களில் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்கள் குறித்தும் தெளிவான அறிக்கை ஒன்றினை முன்வைப்போம். இது குறித்து வெளிவிவகாரத்துறை அமைச்சருடனும் கலந்துரையாடியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## பேச்சில் மாத்திரமல்ல செயலிலும் வெளிப்படுத்துகின்றோம்

பாராளுமன்றத்தில் நேற்று (10) நடைபெற்ற ஜனாதிபதி கொள்கை விளக்க உரை மீதான சபை ஒத்திவைப்புவேளை இரண்டாம் நாள் விவாதத்தின் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டின் அபிவிருத்திக்கான வேலைத்திட்டங்கள் குறித்து ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல் உலக பொருளாதாரத்துடன் இணைந்து பயணிப்பது தொடர்பிலும், அரசியலமைப்பு திருத்தம் தொடர்பிலும் குறிப்பிட்டுள்ளார். நாம் எமது வேலைத்திட்டங்களை பேச்சில் மாத்திரம் அன்றி செயலில் அதனை முன்னெடுக்கின்றோம். இதற்கு எதிர்க்கட்சியும் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று கேட்கின்றோம்.

பாராளுமன்றத்தில் நீண்ட காலமாக பேசப்பட்டுவந்த செயற்குழு முறைமையை செயற்படுத்துவதற்கான கலந்துரையாடல்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம் 225 பேரும் கலந்துகொள்ளக்கூடிய ஜனநாயக கதவு திறக்கப்படவுள்ளது. ஜனாதிபதி, அமைச்சரவை,

> **225 பேரும் கலந்துகொள்ளக்கூடிய ஜனநாயக கதவு திறக்கப்படவுள்ளது**

பாராளுமன்றம், மக்கள் இடையே இருக்கும் இடைவெளிகளை குறைக்க இந்த வேலைத்திட்டங்கள் உதவும். அதேபோன்று நாட்டின் சட்டம் ஒழுங்கை மீண்டும் உறுதிப்படுத்த வேண்டும். இதனை செய்யாது ஜனநாயக பயணத்தை முன்னெடுக்க முடியாது.

நாங்கள் சர்வகட்சி அரசாங்கத்திற்கு செல்ல நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி கூறியுள்ளார். அதற்கு பலர் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர். இது பாராளுமன்றத்தின் மத்தியில் உள்ள மிகவும் முக்கியமான பொறுப்பாக உள்ளது. இதேவேளை 14,500 கிராம சேவகர் பிரிவுகளையும் உள்ளடக்கி புதிய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குள் நாங்கள் செல்ல வேண்டும். அதேபோன்று விவசாயம், மீன்பிடி உள்ளிட்ட அனைத்து தொழில் உள்ளிட்டவற்றை அபிவிருத்தி செய்ய வேலைத்திட்டங்களை முன்னெடுப்போம் என்றார்.

## மக்களின் பிரச்சினைகளை ரணில் தீர்க்கவில்லை

பாராளுமன்றத்தில் நேற்று (10) நடைபெற்ற ஜனாதிபதி கொள்கை விளக்க உரை மீதான சபை ஒத்தி வைப்புவேளை இரண்டாம் நாள் விவாதத்தின் போதே டலஸ் அழகப்பெருமன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உரையின் உள்ளடக்கங்கள் தொடர்பில் எங்களுக்கு எந்தப் பிரச்சினைகளும் கிடையாது. ஆனால் வசனங்களால் அழகு படுத்திய உரையாக இருக்கக் கூடாது என்றே நாங்கள் நினைக்கின்றோம். இவர் பிரதமராகி இன்னும் மூன்று நாட்களில் மூன்று மாதங்கள் ஆவதுடன், ஜனாதிபதியாக பதவியேற்று ஒருமாதமாகவுள்ளது. இந்தக் காலப்பகுதியில் செயற்பாட்டில் இந்த நெருக்கடிகளை தீர்ப்பதற்கு அவர் முன்னெடுத்த நடவடிக்கை என்னவென கேள்வியெழுப்பினார்.

அது தொடர்பாக பார்த்தால் இந்த காலப்பகுதியில் அவர் அவரின் கட்சியில் தோல்வியடைந்த நண்பர்களின் பிரச்சினைகளையும், தனக்கு உதவிய எம்.பிக்களின் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

> **ரணில் பிரதமராகி இன்னும் மூன்று நாட்களில் மூன்று மாதங்கள் ஆவதுடன், ஜனாதிபதியாக பதவியேற்று ஒருமாதமாகவுள்ளது**

ஆனால் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக வேலைத்திட்டத்தை முன்வைத்ததாக தெரியவில்லை.

வேலைத்திட்டங்கள், யோசனைகளை முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால் அதனை செய்யவில்லை. தங்களுடைய மற்றும் தங்களின் கட்சியின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக நெருக்கடியை பயன்படுத்துவதை போன்றே தெரிகின்றது. இதேவேளை சர்வகட்சி அரசாங்கம் தொடர்பில் எங்களின் நிலைப்பாட்டை நாங்கள் குழுவாக அறிவித்துள்ளோம். நாங்கள் இது தொடர்பான வேலைத்திட்டங்கள் தொடர்பில் பார்த்துக்கொண்டு இருக்கின்றோம். மக்களின் கௌரவம், நம்பிக்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தாது என்று எதிர்பார்ப்புடன் இருக்கின்றோம் என்றார்.

## மண்ணெண்ணெய் விலையில் திருத்தம்

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டதால் கடற்தொழிலாளர்கள்,குறைந்த வருமானம் பெறும் தரப்பினர் மண்ணெண்ணெய் விநியோகத்தில் பாதித்துள்ளனர். ஒருசில பகுதிகளில் கடற்றொழிலாளர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டுள்ளது என்றார்.

பாராளுமன்றத்தில் நேற்று (10) உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை மசகு எண்ணெய் கப்பல் எதிர்வரும் 13ஆம் திகதி நாட்டை வந்தடையவுள்ளது. அவ்வாறான நிலைமையில் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் எதிர்வரும் 15ஆம் திகதி திறக்கப்பட்டு 19ஆம் திகதி முதல் மண்ணெண்ணெய் விநியோகம் முன்னெடுக்கப்படும் என்றார். கடற்தொழிலாளர்கள்,குறைந்த வருமானம் பெறும் தரப்பினருக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்ற காரணத்தினால் ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 87 ரூபாவுக்கு வழங்கப்படுகிறது. ஒரு சில பஸ் உரிமையாளர்கள் டீசலுக்கு பதிலாக மண்ணெண்ணெயை பயன்படுத்துகிறார்கள். எனவே, எதிர்வரும் நாட்களில் மண்ணெண்ணெய் விலை திருத்தம் செய்யப்படும் என்றார்.

## "22 "ஆம் திருத்தம் சபையில் சமர்ப்பிப்பு

22ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும் அதன் பின்னர் அதனை பாராளுமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிப்பதற்கும் நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கிய நிலையிலேயே அரசியலமைப்பின் 22 ஆவது திருத்த சட்டமூலம் நேற்று (10) சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதேவேளை, 22 வது அரசியலமைப்பு திருத்தமானது 19 ஆவது திருத்தத்தை இரத்து செய்ததன் பின்னர் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள கட்டுப்பாடற்ற அதிகாரங்களை வழங்கிய அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தை ரத்து செய்யும் என்றும் எதிர்பார்க்கப்படுவதுடன் 22 இன் கீழ் ஜனாதிபதி , அமைச்சரவை, தேசிய சபை, பதினைந்து குழுக்கள் மற்றும் மேற்பார்வைக் குழுக்களும் பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூற வேண்டும். அரசியலமைப்பின் 22ஆவது திருத்தத்திற்கான முன்மொழிவுகள் 2022 ஜூன் 29, அன்று வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பில் வெளியிடப்பட்டன.

## கொட்டாஞ்சேனை கொள்ளை:

அவரது கைகளுக்கு விலங்கிட்டு வீட்டை சோதனையிட வேண்டும் என தெரிவித்து வீட்டிலிருந்த பணம், நகைகளை கொள்ளையிட்டுள்ளனர்.

இதற்கமைய முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கு அமைய, சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு பெண்களும் இரண்டு ஆண்களும் நேற்று முன்தினம் (9) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வெலிகம்பிட்டிய மற்றும் ராகம பகுதிகளிலிருந்து கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து 8,54,000 ரூபாய் பணமும் ஒரு தொகை தங்க நகைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் நால்வரும் 29 மற்றும் 42 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்றும் இவர்கள் கந்தானை, ராகம மற்றும் வெலிகம்பிட்டிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## புதிய கூட்டணி உதயமாகிறது

பி தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னணி, உதய கம்மன்பில எம்.பி தலைமையிலான பிவிதுரு ஹெல உறுமய, இலங்கை கம்யூனிஸ் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, யுதுகம அமைப்பு, எமது மக்கள் சக்தி உட்பட மேலும் சில கட்சிகளும், தேசியவாத அமைப்புகளும் கூட்டணியில் ஒன்றினையும் எனவும் அவர் தெரிவித்தார்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் தலைமையில் சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க முடியாது எனவும், நாட்டின் அடுத்தக்கட்ட அரசியல் செயற்பாடுகளை தீர்மானிக்கும் விதமான முடிவுகள் இப்போதே எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கும் அவர், மாற்று அரசியல் சக்தியாக தாம் உருவாவதாகவும் கூறினார்.

ரணில் வந்தபின்னரும்

## சிங்கள, பௌத்த மயமாக்கள் முயற்சி தீவிரமடைந்துள்ளது

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதன் பின்னர் திருகோணமலை திருக்கோணஸ்வரம் சிவனாலயத்தை சிங்கள, பௌத்த மயமாக்கும் முயற்சி தீவிரமடைந்திருப்பதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி எம்.பியான செல்வராஜா கஜேந்திரன் சபையில் குற்றம் சாட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று (10) நடைபெற்ற ஜனாதிபதியின் சிம்மாசன உரை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குற்றம் சாட்டிய

இலங்கை பல்லின சமூகம் வாழும் நாடு என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கவர்ச்சிகரமான வார்த்தையினை குறிப்பிட்டுக்கொண்டு மறைமுகமாக சிங்கள பேரினவாத நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்துச் செல்கிறார்.திருகோணமலை மாவட்டத்தில் தமிழர்களின் பாரம்பரியம் இராணுவத்தினரது ஆதரவுடன் திட்டமிட்ட வகையில் அழிக்கப்படுகிறது.

நாட்டில் பல்லின சமூகம் வாழ்கின்றார்கள் என்பதை கவர்ச்சிகரமான வார்த்தைகளை சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காக ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டாலும் கூட நடைமுறையில் தமிழ்,முஸ்லிம் மற்றும் கத்தோலிக்க சமூகத்தினருக்கு எதிராக இன அழிப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. உதாரணமாக திருகோணமலை மாவட்டத்தில் அரசாங்கத்தின் அங்கமாக உள்ள தொல்பொருள் திணைக்களம்,வனஜீவராசிகள் திணைக்களத்தினால் தமிழ் மக்களின் பாரம்பரியங்களுக்கு பாரிய நெருக்கடிகள் ஏற்படுத்தப்படுகின்றன.

தொல்பொருள் திணைக்களத்தினால் தமிழர்களின் வரலாற்று தொண்மைமிக்க திருகோணமலை திருக்கோணேஸ்வரம் சிவனாயலத்தை பௌத்தமயமாக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. சிங்கள அரசியல்வாதியான சுசந்த புஞ்சி நிலமேயினால் பலவந்தமான முறையில் சிங்களவர்கள் திருகோணமலை திருக்கோணேஸ்வரம் ஆலயத்தை சூழ்ந்த பகுதியில் கடைகளை அமைப்பதற்கு அனுமதிக்கப்பட்டார்கள். தனது வாக்கு வங்கியினை அதிகரித்துக்கொள்வதற்காக இனவாத பிரச்சினைகளை ஏற்படுத்தும் வகையில் அந்த அரசியல்வாதி ஆலயத்தை சூழ்ந்த பகுதியில் சிங்களவர்களுக்கு கடைகளை அமைக்க அனுமதி வழங்கியுள்ளார்.

தற்காலிகமாக வழங்கப்பட்ட கடை தொகுதியை நிரந்தரமாக வழங்க தொல்பொருள் திணைக்களம் முயற்சிப்பது முற்றிலும் தவறானது. திருக்கோணேச்சரம் ஆலயத்தை பௌத்தமயமாக்கும் நிகழ்ச்சி நிரலை ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானதன் பின்னர் மறைமுகமாக முன்னெடுக்கிறார்.

திருகோணமலை மாவட்டத்தில் 64ஆம் கட்டை பகுதியில் இராஜவந்தான் மலை உள்ளது. இந்த மலையில் அகத்தியமா முனிவர் சிவலிங்க வழிபாட்டில் ஈடுப்பட்டுள்ளார்.இந்த சிவலிங்கமும்,வழிபாட்டுத்தலமும் அகற்றப்பட்டுள்ளது.அங்கு பௌத்த விகாரை ஒன்று அமைக்கப்படுகிறது. கொட்டியாபுரம் என்ற பெயரை திரிபுபடுத்தி, கொட்டியாராம விகாரை என்ற பெயரில் இந்த ஆக்கிரமிப்புக்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்கு இராணுவமும்,அரசாங்க அதிபரும் துணை நிற்கிறார்கள். இராஜவந்தான் ஆலயத்தை புனரமைப்பது தொடர்பில் அரசாங்க அதிபருடன் பேசுகையில் அவ்விடயம் தொடர்பில் பௌத்த பிக்குவிடம் பேச்சுவார்த்தையினை முன்னெடுக்குமாறு அரசாங்க அதிபர் கூறுகின்றார். அரசாங்க அதிபரை விடவும் பிக்குவுக்கு யார் அதிகாரம் கொடுத்தது?தமிழர்களின் இனவழிப்பு மிக தீவிரமாக முன்னெடுக்கப்படுகிறது.



# இவர்கள் செய்தால் குற்றமாக பார்க்கப்படாதா?

பொதுச் சொத்துக்கள் சட்டம், தண்டனை சட்டக் கோவை என்பன இந்த பாராளுமன்றத்தில் செல்லுபடியற்றதா? கொலை, தாக்குதல், கொள்ளைகளை இந்த சபைக்குள் செய்ய முடியுமா என்பது தொடர்பில் சபாநாயகர் தெளிவுபடுத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் தெரிவித்தார் .

பாராளுமன்ற உறுப்பினர்களுக்குள்ள சிறப்புரிமைகள் தொடர்பில் அமைச்சரவை செய்தியாளர் சந்திப்பின் போது அமைச்சரவை பேச்சாளரான அமைச்சர் பந்துலகுணவர்தன வெளியிட்டிருந்த கருத்து தொடர்பில், நேற்று (10) புதன்கிழமை பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றிய போதே சர்ச்சை ஏற்பட்டது.

இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குரிய அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள் தொடர்பில் கேள்விகள் எழுந்துள்ளன.



இந்த அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள் தொடர்பில் மக்கள் தவறாக வழிநடத்தப்பட்டுள்ளனர். பாராளுமன்ற சிறப்புரிமைகள் சட்டத்திற்கு அமைய கருத்து வெளியிடுதல் மற்றும் விவாதிக்கும் உரிமை அதேபோன்று எம். பிக்களுக்கு எதிராக வழக்குத் தொடர முடியாது என்றும், சிவில் வழக்கு நடவடிக்கைகளின் போது சிறை பிடிப்பதில் இருந்து விடுவித்தல் ஆகியன உள்ளன. ஆனால் பாராளுமன்ற சபைக்குள்ளும், பாராளுமன்றத்திற்குள்ளும் பொதுச் சொத்துக்கள் சட்டம் செல்லுபடியற்றது என்று நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) கூறப்பட்டுள்ளது,

பொதுச் சொத்துக்கள் சட்டம், தண்டனை சட்டக் கோவை என்பன இந்த பாராளுமன்றத்தில் செல்லுபடியற்றதா? என்று கேட்கின்றேன். கொலை, தாக்குதல், கொள்ளைகளை இந்த சபைக்குள் செய்ய முடியுமா என்று கேட்கின்றேன். 225 பேரும் மக்களுக்கு மேலேயே இருக்கின்றனர் என்றே சிலர் கூறுகின்றனர். இவர்களுக்கென விசேட சட்டங்கள் இருப்பதாகவே கூறுகின்றனர். 52 நாட்கள் ஆட்சியின் போது இடம்பெற்ற சொத்து சேதங்கள், தாக்குதல்கள் என்பன தொடர்பில் வன்முறைகள் என்ற ரீதியில் கேள்விகளை கேட்கும் போது அரசாங்கத்தின் அமைச்சரவை பேச்சாளர், பொதுச் சொத்துக்கள் இந்த சபைக்குள் செல்லுபடியற்றது என்றும் அதனை சபாநாயகரே தீர்மானிப்பார் என்றும் கூறியுள்ளார். அப்படியென்றால் இந்த சபைக்குள் பொதுச் சொத்துக்கள் சட்டம் செல்லுபடியற்றதா? தண்டனை சட்டக் கோவை செல்லுபடியற்றதா? என்பது தொடர்பில் சபாநாயகர் தெளிவுப்படுத்த வேண்டும் என்றார்.

# வெளியுறவு கொள்கையில் மாற்றம் வேண்டும்

கடந்த காலங்களில் தவறான வெளியுறவு கொள்கைகளினால் பலபேரை எதிரியாக்கிக் கொண்டுள்ளோம். முறையான வெளிநாட்டுக் கொள்கைகளை மீண்டும் இலங்கை பின்பற்ற வேண்டும், இல்லையேல் நாடு மேலும் மோசமான நிலைக்கே தள்ளப்படும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சபையில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (10) நடைபெற்ற ஜனாதிபதி கொள்கை விளக்க உரை மீதான சபை ஒத்தி வைப்புவேளை இரண்டாம் நாள் விவாதத்தின் போதே முன்னாள் ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர், இதற்கு முன்னர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பரிந்துரைத்த பொது இணக்கப்பாட்டுடன் சர்வகட்சி அரசாங்கம் தொடர்பான வேலைத்திட்டங்களை எதிர்பார்த்தோம். ஆனால் இன்னும் அது தொடர்பான தெளிவான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படாமை தொடர்பில் கவலையடைகின்றோம். நாட்டில் ஏற்பட்டுள்ள சமூக பொருளாதார, அரசியல் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வேலைத்திட்டங்களை செயற்படுத்துமாறு நான் அரசாங்கத்தை கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்க காலத்தில் நடுநிலையான வெளிநாட்டு கொள்கையே செயற்படுத்தப்பட்டது. சர்வதேச உறவுகள் அனைத்த நாடுகளுடனும் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டது. அனைத்து துறைகளிலும் வெளிநாட்டு உதவிகள் கிடைத்தன. அப்போது வெளிநாட்டு எதிரிகள் இருக்கவில்லை.



நானும் அதேபோன்று வெளிநாட்டு கொள்கையை செயற்படுத்தினேன்.

இதேவேளை, உலக நாடுகளுடன் ஏற்படுத்திக்கொண்டுள்ள பிரச்சினைகளால் எமது நாட்டு இராணுவ அதிகாரிகளுக்கு நாடுகள் பலவற்றுக்கு செல்ல முடியாதவாறு விசா கிடைக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. எனது காலத்தில் பல நாடுகள் இலங்கையர்களுக்கு அனுமதி வழங்கின. ஆனால், இப்போது அது இல்லாது போயுள்ளன.

புலம்பெயர் தமிழர்கள் இங்கு முதலீடுகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்த்திருந்தனர். ஆனால் ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ யாழ்ப்பாணத்திற்கு விஜயங்களை மேற்கொள்ளவில்லை. அதேபோன்று கொரோனாவால் இறப்பவர்களின் உடல்களை புதைக்கும் விடயத்திலும் பிரச்சினைகளை ஏற்படுத்தி முஸ்லிம் நாடுகளின் ஆதரவையும் இல்லாது செய்துகொண்டுள்ளனர். இந்நிலையில் நாங்கள் முறையான வெளிநாட்டு கொள்கைகளுடன் பயணிக்க வேண்டும். இல்லையேல் நாடு மேலும் மோசமான நிலைக்கே செல்லும் என்றார்.



© Parliament of Sri Lanka

# இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான கலந்துரையாடல்

இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான பாதையாக வருவாய் ஈட்டுதல் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான கலந்துரையாடலொன்று பாராளுமன்றக் கட்டடத்தொகுதியில் நேற்று முன்தினம் (09) இடம்பெற்றது.

சர்வதேச பொருளாதாரம் மற்றும் நிதித்துறையில் நிபுணத்துவம் கொண்ட ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் நிலைபேறான நிதி மையத்தின் (Sustainable Finance Hub of the UNDP) பணிப்பாளர் மார்கோஸ் நெடோ தனது அனுவபம் மற்றும் அறிவை பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பகிர்ந்துகொண்டார்.

அரசங்க நிதி பற்றிய குழுவின் முன்னாள் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ஷன யாப்பா, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்திடம் (UNDP) மேற்கொண்ட கோரிக்கைக்கு அமைய இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

# 61,200 கோடி ரூபாய் கடனில் மின்சார சபை

இலங்கை மின்சார சபை சுமார் 61,200 கோடி ரூபாய் கடனை மின் விநியோகஸ்தர்கள்,கடன் வழங்குநர்களுக்கு செலுத்த வேண்டிய நிலையிலேயே தற்போது மின் கட்டணம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என மின்சக்தி மற்றும் எரி சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார். அத்துடன் இவ்வருடத்தின் கடந்த 7மாதங்களில் மின் உற்பத்திக்கான செலவு 3,300 கோடி ரூபாவாக உள்ள நிலையில் ,2000 கோடி ரூபாய் மட்டுமே வருமானமாக பெற்றுக் கொள்ளப்பட்டது எனவும் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று (10) புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் முன்வைத்த விசேட கேள்விக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்த அமைச்சர் மேலும் கூறுகையில்,

இலங்கை மின்சார சபையின் கோரிக்கைக்கு அமைய பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் அனுமதியுடன் மின்கட்டணம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. எனினும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மின்கட்டண திருத்தம்



ஊடாக நிவாரணம் வழங்க திறைச்சேரியுடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் கூறினார்.

2013ஆம் ஆண்டுக்கு பிறகு மின்கட்டணம் திருத்தம் செய்யப்படவில்லை. தற்போதைய மின்கட்டண திருத்தத்தின் ஊடாக மாத்திரம் மின்சார சபையின் நிதி நெருக்கடியினை முகாமைத்துவம் செய்ய முடியாது. மின்னுற்பத்திக்கான செலவினை குறைக்க பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மின்கட்டணத்தை அதிகரிக்காமல் இலங்கை மின்சார சபையின் நிதி நெருக்கடியினை முகாமைத்துவம் செய்யும் ஏதேனும் திட்டங்கள் இருக்குமானால் எதிர்தரப்பினர் அதனை தாராளமாக முன்வைக்கலாம் என்றார்.

# இலஞ்ச ஊழல் ஒழிப்பு தொடர்பான புதிய சட்டமூலம் விரைவில்

ஊழல் அற்ற அரச சேவையை நடத்திச் செல்லும் வகையில் இலஞ்ச ஊழல் ஒழிப்பு தொடர்பான புதிய சட்டமூலத்தை தயாரித்துள்ளதாகவும், அதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



பாராளுமன்றத்தில் நேற்று(10) நடைபெற்ற ஜனாதிபதி கொள்கை விளக்க உரை மீதான சபை ஒத்தி வைப்புவேளை விவாதத்தின் போதே அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டில் 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நிறைவேற்றும் போது ஐ.நாவின் ஊழல் ஒழிப்பு சட்டத்தை செயற்படுத்துவோம் என்று ஏற்றுக்கொண்டோம். அன்று அந்த சட்டத் திருத்தத்தை செய்தோம். ஆனால் அது நிறைவடையவில்லை. இப்போதும் அந்த சட்டமூலத்தை அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளோம். அதற்கு அனுமதியும் கிடைத்துள்ளது.

இதற்கமைய இப்போதுள்ள இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு பதிலாக புதிய ஆணைக்குழுவும், சொத்துக்கள் மற்றும் சொத்து உரித்துக்கள் தொடர்பாக புதிய சட்டத்தை செயற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலத்தின் வரைபு எதிர்வரும் மூன்று, நான்கு வாரங்களில் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் முன்வைப்போம். இதன்படி நாங்கள் எதிர்பார்க்கும் ஊழல் ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட ஊழல் அற்ற அரச சேவையை நடத்திச் செல்ல முடியுமாக இருக்கும் என்றார்.

# மக்களை மின்சாரக்கதிரையில் ஏற்றியுளீர்கள்

மின்சார கட்டணங்களை 75 சதவீதத்தால் அதிகரித்து மக்களை மின்சாரக்கதிரையில் ஏற்றியுளீர்கள் என சபையில் ஆளுந்தரப்பு மீது குற்றம் சுமத்திய பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ,இது தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட முன்னர் மின் கட்டண அதிகரிப்பை அமல்ப்படுத்தக்கூடாது எனவும் வலியுறுத்தியது.

பாராளுமன்றம் நேற்று (10) கூடியபோது, ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.யும் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவுமான லக்ஷ்மன் கிரியெல்ல ஒழுங்குப்பிரச்சினை ஒன்றை எழுப்பி இதனை வலியுறுத்தினார்.

தங்களை மின்சாரக்கதிரையில் ஏற்றப்போகின்றார்கள் எனக்கூறிக்கொண்டே முன்னர் சிலர் ஆட்சிபீடம் ஏறினார்கள். ஆனால் இன்று மின்சாரக்கட்டணத்தை 75 சதவீதத்தால் அதிகரித்து



மக்களை மின்சாரக்கதிரையில் ஏற்றியுள்ளார்கள். இது மிகவும் அநீதியானது. மக்கள் இன்றுள்ள நிலையில் இதனை அவர்களினால் தாங்கிக்கொள்ள முடியுமா? ஆகவே இந்த மின் கட்டண அதிகரிப்பை ஏற்க முடியாது. எனவே இது தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படவேண்டும். அதன் பின்னரே மின்சாரக் கட்டண அதிகரிப்பு தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்பட வேண்டும் என்றார்.

# இரு தரப்பும் ஒன்றிணைய வேண்டும்

ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஐக்கிய மக்கள் சக்தி இணைய வேண்டும் என்பதே தனது எதிர்பார்ப்பு என அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ சபையில் தெரிவித்துள்ளார்.ஜனாதிபதி ரணில் மீது இப்போது மக்கள் புதிய எதிர்பார்ப்புடன் இருக்கின்றனர் எனவும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று (10) நடைபெற்ற ஜனாதிபதி கொள்கை விளக்க உரை மீதான சபை ஒத்தி வைப்புவேளை விவாதத்தின் போதே அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற வரலாற்றில் ஜனாதிபதியொருவரின் உரைக்கு அதிகளவில் வரவேற்பளிக்கப்பட்ட உரையாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உரையை கூறலாம். கோட்டாபய ராஜபக்ஷவே ரணில் விக்கிரமசிங்கவுக்கு முன்னர் ஜனாதிபதியாக இருந்தார். அதன்போது அவருக்கு தவறிய இடங்களும், ரணில் புரிந்துகொண்டுள்ள விடயங்கள் தொடர்பிலும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நெருக்கடிகளை சரியாக அடையாளம் காணமுடியாது இருந்தது. அதேபோன்று நெருக்கடிக்கு குறுகிய கால மற்றும் நீண்டகால வேலைத்திட்டங்களும் இருக்கவில்லை. ஆனால் ரணில் மீது இப்போது மக்கள் புதிய



எதிர்பார்ப்புடன் இருக்கின்றனர்.

ரணில் விக்கிரமசிங்க சரியாக செய்யாவிட்டாலோ இந்த அரசாங்கம் சரியாக செய்யாவிட்டாலோ மீண்டும் மக்கள் போராடலாம். நாங்கள் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்தோம். எங்கள் மீது பல்வேறு விமர்சனங்களை முன்வைத்தனர். இதனால் அடுத்த முறை வாக்குகள் கிடைக்குமா என்றும் தெரியாது? ஆனால் நோயாளி இறந்தாலும் வயிறு சுத்தம் என்பது போன்றே நாங்கள் செயற்பட்டோம். பதவிக்காக வரவில்லை. பொறுப்புடன் செயற்பட்டோம்.

மொட்டுக் கட்சியை பாதுகாக்கவே ரணிலை நியமித்துள்ளதாக கூறுகின்றனர். ஆனால் ரணிலுக்கு முன்னர் சஜித்தையே அவர் அழைத்துள்ளார். பின்னர் சரத் பொன்சேகாவையே அழைத்தார். அப்படியென்றால் கட்சியை பாதுகாக்க அழைத்தார் என்றால் முதலில் ரணிலைத்தானே அழைத்திருக்க வேண்டும். நான் இன்னும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினரே. இன்னும் எனது அலுவலகத்தில் சஜித் பிரேமதாசவின் புகைப்படத்தைக் கூட அகற்றவில்லை. ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவதையே நான் விரும்புகின்றேன். அதுவே எனது இறுதி இலக்கு என்றார்.

# மாட்டிறைச்சிக்கு விலை நிர்ணயம்

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்



காத்தான்குடியில் மாட்டிறைச்சிக்கான விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ்.எச்.அஸ்பர் தெரிவித்துள்ளார்.

மாட்டிறைச்சிக்கான விலை நிர்ணயம் செய்யும் விசேட கூட்டம் காத்தான்குடி நகர முதல்வர் எஸ்.எச்.அஸ்பர் தலைமையில் நேற்று (10) இடம்பெற்றது. இக்கூட்டத்தில் மாட்டிறைச்சிக் கடை உரிமையாளர்கள், மாடு வியாபாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் ஏகோபித்த தீர்மானத்தின் பிரகாரம் உடன் அமுலுக்கு வரும் வகையில் மாட்டு இறைச்சிக்கான விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

இறைச்சி மாத்திரம் 1கிலோ கிராம் 1,800ரூபாவும், முள்ளுடன் இறைச்சி 1கிலோ கிராம் 1,600ரூபாவும் ஈரல் 1கிலோ கிராம் 2,400ரூபாவும், நுரையீரல்- 1கிலோ கிராம் 1,600ரூபாவும், சதை முள்ளு-1 கிலோ கிராம் 1,000ரூபாவும், குடல் 1 கிலோ கிராம் -900 ரூபாவும், மூளை 500ரூபாவும் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இந்த விலை நிர்ணயம் எதிர்வரும் செப்டெம்பர் 10 ஆம் திகதி வரை நீடிக்கும் என்பதுடன் இது தற்காலிகமானதாகும். அதன் பின்னர் இதை விடவும் குறைந்த விலையில் விலை நிர்ணயம் செய்யப்படும் எனவும் நகர முதல்வர் எஸ்.எச்.அஸ்பர் தெரிவித்தார்.

அத்துடன் இம்மாதம் 20ஆம் திகதிமுதல் மாட்டிறைச்சிக் கடைகளில் இலத்திரனியல் தராசு பயன்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழில் சமையல் எரிவாயு விநியோகத்தில் குழப்பம்

■ நிதர்சன் விநோத், எம்.றொசாந்த்

யாழ். மாவட்டத்தில் உள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு சுமார் 1,000 எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட செயலகத்தால் அறிவிக்கப்பட்டதாக தெரிவித்து அரச உத்தியோகத்தர்கள் யாழ். பிரதேச செயலகத்திற்கு அருகாமையில் உள்ள அரச திறன் விருத்தி மையத்தில் நேற்று (10) ஒன்று கூடினர்.

இதன் போது குறித்த பகுதிக்கு வந்த பொதுமக்கள் சிலர் தமக்கு எரிவாயு சிலிண்டர்கள் வேண்டுமென கேட்ட நிலையில் அங்கு குழப்ப நிலை ஏற்பட்டது.

இதன்போது அங்கு நின்ற அதிகாரிகள் "அரச உத்தியோகத்தர்களுக்கு மட்டும் எரிவாயு வழங்கப்படுவதாக" தெரிவித்தனர்.



இதன் போது கருத்து தெரிவித்த பொதுமக்கள் தமது பிரதேசங்களில் எரிவாயுக்காக பெயர்களை பதிவு செய்த நிலையில் இவ்வாறு பெருமளவு சிலிண்டர்களை அரச உத்தியோகத்தர்களுக்கு ஒரே தடவை வழங்குவது எவ் விதத்தில் நியாயம் என கேள்வி எழுப்பினர்.

குறித்த விடயம் தொடர்பில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப் பிள்ளை மகேசன் மற்றும் மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதிபனை தொடர்பு கொண்டு கேட்டபோது, குறித்த பகுதியில் அரச உத்தியோகத்தர்களுக்கு எரிவாயு விநியோகத்தை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கவில்லை என தெரிவித்தனர்.

# அட்டப்பள்ளத்தில் இரு மாணவர்கள் சாதனை



■ சகா



கல்முனை வலயத்தில் மிகவும் பின்தங்கிய அட்டப்பள்ளம் விநாயகர் வித்தியாலய மாணவர்கள் இருவர் மாவட்ட மட்டத்தில் பங்குபற்றி 2022 ஆம் ஆண்டு மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

12 வயதிற்குட்பட்ட நீளம் பாய்தல் போட்டியில் து.பவிக்ஸா 1ஆம் இடத்தையும், 14 வயதிற்குட்பட்ட குண்டுபோடுதல் போட்டியில் ச.டோஜித் 2ஆம் இடத்தையும் பெற்று சாதனை படைத்து உள்ளனர்.

மாணவர்களைப் பாராட்டும் நிகழ்வில் அதிபர் ச.ரகுநாதன், பிரதிஅதிபர் த.நடேசலிங்கம், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் த.ம.றிஸ்மி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இப் பாடசாலையில் விளையாட்டுமைதானம் இல்லை, கல்முனை கல்வி வலயத்தில் உள்ள அதிகஷ்ரப்பிரதேச பாடசாலை பயிற்றுவிப்பாளரின் அயராதமுயற்சி வெற்றிக்கு காரணம் என அதிபர் ச.ரகுநாதன் தெரிவித்தார்.

# இளைஞன் நீரில் மூழ்கி உயிரிழப்பு

■ தீஷான் அஹமட்

சம்பூர் பொலிஸ் பிரிவிலுள்ள கட்டைபறிச்சான் இறால் பாலத்தின் ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் தோப்பூர் - சின்னக்குளம் பகுதியைச் சேர்ந்த தவகுமார் ரதுசன் ( வயது -18 ) உயிரிழந்துள்ளதாக சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த சிறுவன் தனது நண்பர்களோடு இறால் பாலத்தில் குளித்துக் கொண்டிருந்த போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவருகிறது.

சம்பவ இடத்திற்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஏ.ஜே.ஏ.நூருல்லா ஞாயிற்றுக்கிழமை மாலை சென்று பார்வையிட்டார். உயிரிழந்த சிறுவனின் சடலம் மீட்கப்பட்டு மூதூர் தள வைத்தியசாலையில் வைக்கப்பட்டு பின்னர் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக திங்கட்கிழமை (08) திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் திடிர் மரண விசாரணை அதிகாரி குறிப்பிட்டார் .

மேலும், சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சம்பூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# உழவு இயந்திரம் மீட்கப்பட்டது

■ யது பாஸ்கரன்


கிளிநொச்சியில் கடந்த 7ஆம் திகதி களவாடப்பட்ட இராமநாதபுரம் பகுதியில் வசித்த ஒருவரது உழவு இயந்திரம் மீட்கப்பட்டுள்ளது.

எரிபொருளை பெற்றுக் கொள்வதற்காக கிளிநொச்சி - பரந்தன் நகரப்பகுதியில் அமைந்துள்ள தனியார் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வரிசையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த வாகனம் காணாமல் போயிருந்தது.

இந்த நிலையில் விசுவமடு புன்னைநீராவி பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமிற்கு அருகாமையில், வீதி ஓரமாக குறித்த உழவு இயந்திரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் பொது மக்களால் பொலிஸாருக்கு நேற்று (10) தகவல் வழங்கப்பட்டுள்ளது.

உழவு இயந்திரத்தில் பல உதிரிபாகங்கள் திருடப்பட்டுள்ள நிலையில், சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வாளை காட்டியவர்கள் வசமாக சிக்கினர்



■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் - காரைநகர் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வாளினை காட்டி பணியாளர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்து குழப்பங்களை ஏற்படுத்திய இரு இளைஞர்கள் ஊர்காவற்துறை பொலிஸாரினால் நேற்று (10) கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், சம்பவம் நடக்கும் போது அவ்விடத்தில் நின்ற ரசலிங்கம் பொன்னம்பலம் என்பவரின் வீட்டுக்கு இரவு தீ வைக்கப்பட்டுள்ளது.

காரைநகர் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் காலை எரிபொருள் நிரப்ப வந்த இரு இளைஞர்கள் அங்கு குழப்பத்தை ஏற்படுத்தி, எரிபொருள் நிரப்பு நிலைய பணியாளர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்ததுடன் , பணியாளர்களுக்கு வாளினை காட்டி மிரட்டியும் உள்ளனர்.

சம்பவத்தினை அடுத்து இரு இளைஞர்களையும் ஊர்காவற்துறை பொலிஸார் கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# கசிப்பு ஒழிப்பில் பெண்கள் அதிரடி

■ நடராசா கிருஸ்ணகுமார்



கிளிநொச்சி பூநகரி, முக்கொம்பன் கிராமத்தில் இருந்து கசிப்பை ஒழிப்பதற்கு கிராம பெண்கள் ஒன்றிணைந்து நடவடிக்கையில் இறங்கி உள்ளனர். கசிப்பை கட்டுப்படுத்துமாறு, பூநகரி பொலிஸாரிடம் நேரில் சென்று பிரதேச பெண்கள் மனு கொடுத்த போது, பெட்ரோல் இல்லாததன் காரணமாக முக்கொம்பன் கிராமத்துக்கு தமக்கு வருகை தர முடியவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து, ஒன்றுதிரண்ட பெண்கள், கசிப்பு உற்பத்தி இடம்பெறும் பகுதிகளை சுற்றிவளைத்து, கசிப்பை கைப்பற்றியதுடன், உற்பத்தியில் ஈடுபட்டவர்களையும் மடக்கிப்பிடித்து பூநகரி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அத்துடன், "கிராமத்தில் இருந்து கசிப்பை ஒழிப்போம்" எனும் வகையில் கிராமந்தோறும் துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டு வருகின்றன.

கசிப்பினால் குடும்ப, சமூக வன்முறைகள் அதிகரித்ததன் காரணமாகவே கசிப்பை ஒழிப்பதற்கு தாம் ஒன்றிணைந்து செயற்பட்டு வருவதாக பெண்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, முக்கொம்பன் கிராமத்துக்கு அண்மையில் வருகை தந்த பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனிடம் கிராமத்தில் இருந்து கசிப்பை கட்டுப்படுத்துவதற்கு ஒத்துழைப்பையும் ஆலோசனைகளையும் வழங்குவதுடன், மாவட்டத்தின் பொலிஸ் உயரதிகாரிகளிடம் கிராம நிலவரம் தொடர்பாகவும் தெரிவிக்கும் படியும், கிராம மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

# மரக்கன்றுகள் வழங்கி வைப்பு





■ எம்.எம்.அஹமட் அனாம்

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் 12 மாத விளக்கு வேலை திட்டத்தின் கீழ் கலைஞர்களுக்கான மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தில் நேற்று(10) நடைபெற்றது.

பிரதேச செயலாளர் எஸ்.எச்.எம்.முஸம்மில் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கலாசார உத்தியோகத்தர் ஏ.எல்.பீர்முஹம்மது, கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்களான திருமதி.எஸ்.திலிபா, திருமதி. ஜே.ரதிதேவி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக பிரிவிலுள்ள பிரதேச கலைஞர்களுக்கு மூன்று மரக்கன்றுகள் வீதம் மா, கொய்யா, தோடை பழமரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டது.

உதிரம் கொடுத்து உயிர்காக்கும்

# உன்னத பணிக்கு அவசர அழைப்பு

## மட்டு. போதனாவுக்கு வாருங்கள்

■ எம்.எஸ்.எம் நூர்தீன்

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி எதிர்நோக்கும் இரத்தப் பற்றாக்குறையை நிவர்த்திப்பதற்காக மட்டக்களப்பு பிரதேசத்தில் வாழும் மக்கள் தம் உதிரத்தைக் கொடுத்து, உடன்பிறப்புகளின் உயிரைக்காக்க முன் வரவேண்டுமென மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி வேண்டுகோள் விடுத்துள்ளது.

போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியினால் தினமும் சராசரியாக 40 முதல் 50 பைன்ட் உதிரம் அவசர தேவையுடைய நோயாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

தற்போதைய சூழ்நிலையில், இரத்தவங்கியில் குறைந்த அளவிலான உதிரம் மட்டுமே கையிருப்பில் உள்ளதாக வைத்தியசாலையில் கடமையாற்றும் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். முன்பு 700 தொடக்கம் 800 பைன்ட் உதிரம் சேமித்து வைக்கப்பட்டு இருந்துவந்தள்ளமை குறிப்பிடத்தக்கது.

தானத்தில் சிறந்த தானம் இரத்ததானம் எனும் அடிப்படையில் ஒரு மனித உயிரைக் காப்பாற்றும் பொறுப்பு சக மனிதனின் கடமையாகும்.

# மரக்கறிகளை விற்க தடை விதிக்குமாறு கோரிக்கை

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம், கல்வியங்காடு, செங்குந்த சந்தையில் உள்ள மரக்கறி வியாபாரிகள், சந்தைக்கு வெளியே பலசரக்கு கடைகளில் முன்னெடுக்கப்படும் மரக்கறி வியாபாரத்தை தடை செய்யக் கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன், யாழ்ப்பாணம் மாநகர சபை , நல்லூர் பிரதேச சபை மற்றும் கோப்பாய் பொலிஸார் ஆகியோருக்கு மகஜர் ஒன்றினையும் கையளித்து உள்ளனர்.

சந்தைக்குள் வந்து மக்கள் மரக்கறியினை கொள்வனவு செய்யாமல் , வீதியோரமாக இருக்கும் பலசரக்கு கடைகளில் மரக்கறியினை கொள்வனவு செய்து கொண்டு செல்கின்றனர்.

அதனால் சந்தையின் உள்ளே மரக்கறி வியாபாரத்தில் ஈடுபடும் எம்மிடம் மக்கள் வருவதில்லை. சில கடைகளில் சுகாதாரமின்றி மரக்கறிகளை கொட்டி விற்பனை செய்து வருகின்றனர்.

சந்தைக்கு வெளியே உள்ள கடைகளில் மரக்கறி வியாபாரம் நடைபெறுவதனால் எமது சந்தை சுற்று வட்டாரத்தில் உள்ள யாழ்.மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேச சபை ஆகியவற்றின் ஆளுகைக்குள் உள்ள கடைகளில் மரக்கறி வியாபாரத்தை தடை செய்ய கோரி இரு சபைகளிடமும் மகஜர் கையளித்துள்ளோம் என்றனர்.



# முல்லைத்தீவு கடலில் இந்தியப் படகுகள்

## பொலிஸில் முறைப்பாடு

■ செ.கீதாஞ்சன்

கடந்த இரு நாட்களாக முல்லைத்தீவு கடலில் இந்திய இழுவைப் படகுகள் தொடர்ச்சியாக காணப்படுகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த கடற்படையினர் மற்றும் கடற்றொழில் நீரியல்வளத்திணைக்களம் கடற்றொழில் அமைச்சுக்குத் தெரியப்படுத்தியும் எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையில், முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் (09) முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது. முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளார் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் வி.அருள்நாதனினால் இந்த முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மண்ணெண்ணை இல்லாத நிலையில், முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் கடந்த மூன்று மாதங்களாக கடலுக்கு செல்லமுடியாத நிலையில், அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக அரச திணைக்களங்கள் மற்றும் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் இலங்கை கடல்வளத்தை இந்திய மீனவர்கள் ஆக்கிரமித்துள்ளனர்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு

# சட்டத்தின் ஊடாக நீதி கிடைத்துள்ளது

டி.ஷங்கீதன்

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள பிரச்சினை தொடர்பான வழக்கை மேன்முறையீட்டு நீதிமன்றம் தள்ளுபடி செய்து வழங்கிய தீர்ப்பின் மூலமாக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சட்டத்தின் மூலமாக நீதி கிடைத்துள்ளது என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

"இலங்கை நீதித்துறை வழங்கிய இந்த தீர்ப்பானது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தீர்ப்பாக அமைந்துள்ளது" என்றார்.

மேற்படி விடயம் தொடர்பாக, நேற்று (10) கருத்துத் தெரிவித்த அவர், இந்த வழக்கை ஒரு காரணமாக காட்டிக் கொண்டு



பெருந்தோட்ட கம்பனிகள் பல தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய பல விடயங்களை கொடுக்காமல் இழுத்தடிப்பு செய்து வந்தன.

இது தொடர்பாக தொழிற்சங்க உறுப்பினர்கள் பெருந்தோட்ட கம்பனிகளின் காரியாலயங்களில் சென்று பேச்சுவார்த்தையில் ஈடுபட்டாலும் அதற்கு அவர்கள் உரிய பதிலை பெற்றுக் கொடுக்காமல் இந்த வழக்கை ஒரு காரணமாக காட்டி தொழிலாளர்களுக்கு நியாயமாக கிடைக்க வேண்டியவற்றை பெற்றுக் கொடுக்க மறுத்து வந்தார்கள்.

ஆனால், தொழிலாளர்கள் நீதிமன்றத்தின் மீது கொண்ட நம்பிக்கையின் பயனாக தொழிலாளர்களுக்கு சார்பாக சட்டம் தனது கடமையை செய்திருக்கின்றது. எனவே, இனிமேலும் பெருந்தோட்ட கம்பனிகள் தொழிலாளர்களுக்க வழங்க வேண்டிய அனைத்தையும் பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும்.

தொழிற்சங்கங்களின் குரலை நசுக்கி தொழிலாளர்களுக்காக குரல் கொடுக்க முடியாத ஒரு நிலைமையை பெருந்தோட்ட கம்பனிகள் ஏற்படுத்தியிருந்தன. அதற்கு காரணமாக அமைந்ததும் இந்த வழக்கே எனத் தெரிவித்த அவர், பெருந்தோட்ட கம்பனிகள் தங்களுக்கு சார்பாக வழக்கின் தீர்ப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இருந்தன என்றார்.

ஆனால், தொழிலாளர்கள் தங்களுடைய கடுமையான உழைப்பு நம்பிக்கை அடிப்படையில் செயற்பட்டதன் காரணமாக அவர்களுக்கு நீதிமன்றத்தின் மூலமாக இன்று நீதி கிடைத்திருக்கின்றது.

எனவே, பெருந்தோட்ட கம்பனிகள் இனியும் தாமதிக்காமல் தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயமான சம்பளத்தை பெற்றுக் கொடுக்க முன்வருவதுடன் அவர்களுக்கு கிடைக்க வேண்டிய நிலுவைத் தொகையையும் பெற்றுக் கொடுத்து இன்றைய பொருளாதார நெருக்கடியில் இருந்து தொழிலாளர்களை மீட்டெடுக்க வேண்டும் என்றார்.

மலையக பெருந்தோட்ட தொழிலாளர்கள் என்றுமே அராஜகத்தில் ஈடபட்டதில்லை. சட்டத்துக்கு எதிராகவும் செயற்பட்டதில்லை. தங்களுடைய உரிமைகளுக்காகவும் சம்பள உயர்வுக்காகவும் அஹிம்சை வழியிலேயே போராட்டங்களை முன்னெடுத்து வந்திருக்கின்றார்கள்.அதற்கு கிடைத்த வெற்றியே இந்த வழக்கின் தீர்ப்பாகும் என்றார்.



இரத்தினபுரியில்

## கொவிட் -19 ஆவது தடுப்பூசி

சிவாணி ஸ்ரீ

கொரோனா தொற்றிலிருந்து பாதுகாப்பது குறித்து நான்காவது தடுப்பூசி வழங்கும் செயற்றிட்டம் நேற்று (10) இரத்தினபுரியில் -சப்ரகமுவ மாகாண சபை கட்டடத்தொகுதியில் நடைபெற்றது.

கொரோனா தொற்றிலிருந்து பாதுகாப்பைப் பெற மக்கள் தடுப்பூசியை செலுத்தி கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்த வேண்டுகோளுக்கினங்க இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் நான்காவது தடுப்பூசியை வழங்குவதற்கு சுகாதார பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி நான்காவது தடுப்பூசி வழங்கும் செயற்றிட்ட நிகழ்வில் சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் சுனில் ஜயலத், மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் பிரபாத் உதாகர, மாகாண ஆளுநர் அலுவளகத்தின் செயலாளர் எச்.டி.சிசிர, மாகாண ஆளுநரின் பிரத்யேக செயலாளர் மஞ்சுலா இதிகாவெல உட்பட அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.





## தேர்கள் நகருலா சென்றன...

ஆடித் திருவிழாவையொட்டி பசறையில் 8 தேர்கள் நேற்று முன்தினம் (8) பசறை நகருலா சென்றன. பசறை நகர் ஆலயத்திலிருந்து இரு தேர்கள், அம்மணிவத்த ஆலயத்திலிருந்து 3 தேர்கள், எல்டப் ஆலயம், மாத்தன்னை ஆலயம், கோணகல ஆலயம் ஆகிய இடங்களிலிருந்து தலா ஒன்றென மொத்தமாக 8 தேர்கள் பசறை நகரை வந்தடைந்தன. (எம். செல்வராஜா)

## "அடக்குமுறையை உடனே நிறுத்து"

### ஹட்டனில் ஆர்ப்பாட்டம்

எஸ்.கணேசன்




"ரணில் ராஜபக்ஷ அரசாங்கத்தின் அடக்குமுறையை உடனே நிறுத்து"என்ற தொனிப் பொருளில் ஹட்டனில் தொழிற்சங்க ஒருங்கிணைப்பு நிலையம் மற்றும் ஒன்றிணைந்த மக்கள் இயக்கம் ஆகிய அமைப்புகளின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் (10) போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டத்தில் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள் என பெருமளவானோர் பங்கேற்றனர்.

ஹட்டன் மணிக்கூட்டு கோபுரத்திற்கு முன்பாக இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

"அவசரகால சட்டத்தை சுருட்டிக்கொள், பாராளுமன்றத்தை உடனே நிறுத்து", "புதிய மக்கள் ஆணைக்கு இடமளி" போன்ற பதாதைகளை ஏந்தியவண்ணம், கோஷங்களை எழுப்பியவாறு குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பாராளுமன்றத்தை களைத்து புதிய மக்கள் கருத்துக்கு இடமளிக்க வேண்டும். அத்தோடு, கைதுகளையும், அநீதியான ஆட்கடத்தல்களையும் உடனடியாக இவர்கள் நிறுத்த வேண்டும் என போராட்டக்காரர்கள் வலியுறுத்தியதுடன், அவ்வாறு இல்லா விட்டால் போராட்டம் தொடரும் எனவும் சூளுரைத்தனர்.

அத்துடன், கொழும்பு காலிமுகத்திடல் போராட்டக்களத்தில் இடம்பெறும் போராட்டத்துக்கு தமது முழு ஆதரவையும், மலையக மக்கள் சார்பில் வெளிப்படுத்தினர்.

தகரமலை தோட்டத்தில்

## 8 குடும்பங்கள் பாதிப்பு

### அசட்டையில் தோட்ட நிர்வாகம்

டி.ஷங்கீதன்



கொட்டகலை தகரமலை தோட்டத்தில் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு உடனடியாக தேசிய கட்டிட ஆராய்ச்சி திணைக்களத்தின் அறிக்கையை பெற்றுக் கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுவதாக மலையக தொழிலாளர் முன்னணியின் நிதிச் செயலாளர் விஸ்வநாதன் புஸ்பா தெரிவித்துள்ளார்.

மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஸ்ணனின் பணிப்புரைக்கு அமைய, பாதிக்கப்பட்ட மக்களை, மலையக தொழிலாளர் முன்னணியின் நிதிச் செயலாளர் விஸ்வநாதன் புஸ்பா பார்வையிட்டதுடன் பாதிக்கப்பட்ட மக்களையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த அவர்,

இது தொடர்பாக தோட்ட நிர்வாகமோ அல்லதுஅரசஅதிகாரிகளோ எந்தவிதமான நடவடிக்கைகளையும் இதுவரையில் மேற்கொள்ளவில்லை.

குறித்த தோட்டத்துக்கு தான் சென்று பார்வையிட்ட பின்பு இந்த விடயத்தை கிராம சேவகரின் கவனத்திற்கு கொண்டு சென்றதாகவும் அவர் மாவட்ட செயலாளருடன் தொடர்பு கொண்டு பேசிய பொழுது இந்த வீடுகள் அமைந்துள்ள காணிகளை உடனடியாக தேசிய கட்டட ஆராய்ச்சி திணைக்களத்தின் ஊடாக அறிக்கை ஒன்றை பெற்றுக் கொண்டு அதற்கு அமைய தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்ப்பதாக மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளதாக கிராம சேவகர் தன்னிடம் தெரிவித்ததாக்க் கூறினார்.

மேலும் இந்த குடியிருப்புகள் தொடர்பாக நேரடியாக மாவட்ட செயலாளருடனும் தோட்ட நிர்வாகத்துடனும் கலந்துரையாடுவதற்கும் தீர்மானித்திருக்கின்றோம்.

ஏனெனில் இங்கு வசிப்பதற்கு ஏற்ற சூழ்நிலை இல்லை.எந்த நேரத்திலும் பாரிய அனர்த்தம் ஒன்று நடைபெறுவதற்கான வாய்ப்பு இருக்கின்றது.

இவ்வாறான விடயங்களில் தோட்ட நிர்வாகமும் அரசாங்க அதிகாரிகளும் மிகவும் மந்த கதியிலேயே செயற்பட்டு வருவது வேதனைக்குரிய விடயமாகும் எனவும் விஸ்வநாதன் புஸ்பா மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## தேசிய வேலைத்திட்டமே தற்போதைக்கு அவசியம்

நாட்டில் காணப்படும் பொருளாதார பிரச்சினைக்கு தீர்வு காண தேசிய வேலைத் திட்டம் அவசியம் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் உதயகுமார் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் அக்கிராசன உரை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய போது இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த பாராளுமன்ற வரலாற்றில் ஜனாதிபதிகளால் நிகழ்த்தப்பட்ட அக்கிராசன உரைகளில் பொதுப்படையான மற்றும் வெளிப்படையான அக்கிராசன உரையாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆற்றிய உரை காணப்படுகிறது. இதனை பலரும் வரவேற்றுள்ளனர்.

**சிறிய விலை குறைப்பு செய்து மறுபக்கம் அசாதாரணமான முறையில் மின் கட்டணத்தை அதிகரித்துள்ளமை ஏற்றுக்கொள்ள முடியாதது**

பொதுவாக, வாக்குறுதிகளை வாரி வழங்கும் உரைகளுக்கு பதிலாக எதிர்கால திட்டங்கள் மற்றும் தூரநோக்குடைய செயற்பாடுகள் அடங்கிய உரையாக இது அமைந்துள்ளது. ஆகவே, இது வெறும் உரையாக மாத்திரம் இருக்காமல் அதற்கு செயல்வடிவம் கொடுக்க வேண்டும் எனெனில், நாட்டு மக்களின் அன்றாட தேவைகள் மற்றும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டியதே,காலத்தின் அவசரத் தேவையாக உள்ளது என்றார்.

பொருளாதாரம் கடுமையான வீழ்ச்சியை சந்தித்துள்ளது, பணவீக்கம் பாரியளவு அதிகரித்துள்ளது. சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பிருந்த அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அனைத்தும் இரண்டு மடங்கல்ல மூன்று - நான்கு மடங்குகளால் அதிகரித்து காணப்படுகிறது.

**நாட்டு மக்களின் அன்றாட தேவைகள் மற்றும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டியதே,காலத்தின் அவசரத் தேவையாக உள்ளது**

விலைகளை அதிகரிக்கும் போது ஜெட் வேகத்தில் அதிகரிப்பதும், குறைக்கும் போது ஆமை வேகத்தில் குறைப்பதும் வேடிக்கையாக உள்ளது என்றார்.

75 சதவீத மின் கட்டணம் உயர்வு என்பது நாட்டு மக்களின் பொருளாதார நிலையில் மேலும் சுமையை ஏற்படுத்தும். அதனால், அரசாங்கம் உடனடியாக மின் கட்டண உயர்வை மீள்ப்பரிசிலனை செய்ய வேண்டும்

ஒருபக்கம் சில பொருட்களுக்கு சிறிய விலை குறைப்பு செய்து மறுபக்கம் அசாதாரணமான முறையில் மின் கட்டணத்தை அதிகரித்துள்ளமை ஏற்றுக்கொள்ள முடியாதது என்றார்.

# பெற்றோர்கள் போராட்டம்



பி.கேதீஸ்

தலவாக்கலை சுமண தேசிய உயர்தரப் பாடசாலைக்கு நியமிக்கப்பட்ட புதிய அதிபரை கடமைகளை பொறுப்பேற்க விடாமல் சிலர் தடுப்பதாகக் கூறி, தலவாக்கலை நகரில் பெற்றோர்களால் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று (10) நடத்தப்பட்டது.

தலவாக்கலை நகரிலிருந்து சுலோகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுப்பட்ட பெற்றோர்கள், சுமண தேசிய உயர்தரப் பாடசாலையை நோக்கி பேரணியாகச் சென்று பாடசாலைக்கு அருகாமையில் மீண்டும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த பாடசாலையின் நியமிக்கப்பட்ட அதிபர் போராட்ட இடத்திற்கு வந்து தாம் பாடசாலை அதிபராக பொறுப்பேற்றுக் கொண்டதாக தெரிவித்ததையடுத்து, போராட்டத்தில் ஈடுபட்ட குழுவினர் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

## பசுவை இறைச்சியாக்கிய அறுவருக்கும் பிணை

ஆ.ரமேஸ்

இராகலை தொழிற்சாலை பிரிவு தோட்டத்தில் பசு ஒன்றை சட்டவிரோதமாக வெட்டி, அதன் இறைச்சியை விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்கள் அறுவரையும் பிணையில் செல்ல வலப்பனை நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் (08) உத்தரவிட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் மலையக மக்கள் முன்னணியின் இராகலை பிராந்திய மாவட்ட தலைவர் ஒருவர் உட்பட ஆறு பேரை இராகலை பொலிஸார் கடந்த (28) அன்று கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்திருந்தனர். இந்த நிலையில் குறித்த சந்தேக நபர்களை ஒகஸ்ட் (08) வரை விளக்க மறியலில் வைக்க வலப்பனை நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டிருந்தார். இந்த வழக்கு நேற்று முன்தினம் (8) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது, சந்தேக நபர்கள் அறுவருக்கும் தலா 25 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பிணையிலும்,தலா இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீரப் பிணையிலும் விடுவிக்க நீதவான் அனுமதி வழங்கியுள்ளார்.

# மக்களின் மனங்களை சுரண்டிப்பார்க்க வேண்டுமென வலியுறுத்தல்

மக்களுடன் நேரடி தொடர்புகளை கொண்டிருக்கும் அரச நிறுவனங்களில், உள்ளூராட்சி மன்றங்கள் முக்கியமானவை. அந்த மன்றங்களின் உறுப்பினர்களுக்கும் மக்களுக்கும் இடையில் நேரடியான பிணைப்பு இருக்கும். எவ்வாறான சந்தர்ப்பங்களிலும் அந்த மன்றங்களின் பிரதிநிதிகளே களத்துக்குச் சென்று நிற்பர்.

ஆட்சிப்பீடத்தில் இருக்கும் அரசாங்கங்கள் உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தலை நடத்தி, தங்களுடைய அதிகாரத்தை சுரண்டிப்பார்த்துக்கொள்வர். அதற்குப் பின்னர் மாகாண சபைகள், பொதுத்தேர்தலுக்குச் சென்று, ஆட்சியதிகாரத்தை பிடித்துக்கொள்வர். இறுதியாக ஜனாதிபதித் தேர்தலை மையப்படுத்தி காய்களை நகர்த்திச்செல்வர்.

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் நிறைவடைந்த நிலையில், அப்பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளதே தவிர, தேர்தல்கள் இன்னுமே நடத்தப்படவில்லை. இந்நிலையில்தான், சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவை, ஒகஸ்ட் 09 ஆம் திகதியன்று சந்தித்த அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் இவ்வாண்டு, ஒக்டோபர் 31ஆம் திகதிக்குப் பின்னர் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தியுள்ளன.

இதற்கிடையே, அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் நிறுவப்பட்ட மாகாண சபைகளில், ஐந்து மாகாண சபைகள் கலைக்கப்பட்டு 5 வருடங்கள் நிறைவடைந்துள்ளன. மாகாண சபைத் தேர்தலை பழைய முறைமையிலா? அல்லது புதிய முறைமையிலா? தேர்தலை நடத்துவது என்பது தொடர்பிலான இழுபறிக்கு இன்னுமே தீர்வு காணப்படவில்லை.

இதனால், ஏனைய மாகாணங்களை விட, வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த சிறுபான்மையின மக்களே பெரிதும் பாதிக்கப்படுவர். தங்களுடைய நேரடி பிரதிநிதிகளை தெரிவுச் செய்துக்கொள்வதில், இந்த முறைமைகளே அம்மக்களுக்கு முட்டுக்கட்டையாக நிற்கின்றன. மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கான முடிவு, பாராளுமன்றத்தின் ஊடாகவே எட்டப்பட வேண்டும்.

நாடு, தற்போது பொருளாதார நெருக்கடிக்குள்ளும், ஸ்திரமற்ற அரசியல் நெருக்கடிக்குள்ளும் சிக்கிக்கொண்டிருக்கின்றது. அவற்றிலிருந்து மீண்டெழுவதற்கான முயற்சிகள் கொஞ்சம், கொஞ்சமாக முன்னெடுக்கப்படுகின்றன. எனினும், மக்கள் மீது சுமத்தப்பட்ட பொருளாதார சுமையை, குறைப்பதற்கு உறுப்படியான செயற்றிட்டங்கள் இதுவரை முன்வைக்கப்படவில்லை.

ஒரு சில அத்தியாவசியப் பொருட்களின் விலைகள், சேவைகளின் கட்டணங்கள் குறைக்கப்பட்டிருந்தாலும், அவை போதுமானவையாக இல்லை. இவ்வாறான நிலைக்குள் தேர்தலுக்குச் செல்வது எந்தவிதத்திலும் பொருத்தமானதாக இருக்காது. அதேபோல, மக்கள் மட்டுமன்றி சர்வதேச அமைப்புகளையும் அதனை விரும்பாது. எனினும், ஜனநாயகத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாய் இருக்கும்.

ஜனநாயகத்தை உறுதிப்படுத்த வேண்டுமாயின் தேர்தலுக்குச் செல்லவேண்டும். எனினும், சர்வக்கட்சி அரசாங்கமொன்றும் அமைக்கப்பட்டு, பலமிழந்த எதிர்க்கட்சி இருக்குமாயின், அரசாங்கத்தின் சர்வாதிகாரமே தலைத்தூக்கி நிற்கும். அது மக்களை இன்னுமின்னும் வாட்டி வதைத்துவிடுமென எதிரணியினர் தெரிவிக்கின்றனர். முதலில் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு கண்டு, அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி, அதன்பின்னர், மக்களின் மனங்களை சுரண்டி பார்ப்பதே பொருத்தமானது. அதற்குள் தேர்தல்களை நடத்துவதில் இருக்கும் முடிச்சுகளை பாராளுமன்றமே அவிழ்க்கவேண்டும் என வலியுறுத்துகின்றோம்.


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# கூட்டமைப்பு கைக்கூலிகளின் கூட்டு ஆகிறதா?



புருஜோத்தமன் தங்கமயில்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் 'ரணில்- ராஜபக்ஷ' கூட்டடம் விலை போய்விட்டதாக புகைந்து கொண்டிருந்த சந்தேகத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எண்ணைய் ஊற்றியிருக்கிறார். சர்வகட்சி அரசாங்கத்தினை அமைப்பது தொடர்பில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற கட்சிகளை அழைத்து ரணில் சந்தித்து வருகிறார். அதன் ஒரு கட்டமாக கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பை கடந்த வாரம் நிகழ்த்தினார். இதன்போதே, ஜனாதிபதித் தெரிவின் போது, டலஸுக்கு ஆதரவளிப்பது என்ற கூட்டமைப்பின் தீர்மானத்தினைத் தாண்டி சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தனக்கு வாக்களித்தாக கூறியிருக்கிறார். இதனை, கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சிலர் ரணிலிடம் மறுத்த போதும், அவர் அதனை நிராகரித்து தமிழ் மக்களின் நலனுக்காக சில கூட்டமைப்பு உறுப்பினர்கள் தனக்கு வாக்களித்ததாகவும், அவர்கள் யாரென்பது தனக்குத் தெரியும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

ஜனாதிபதித் தெரிவுக்கான பாராளுமன்ற வாக்கெடுப்பில் என்ன தீர்மானத்தினை எடுப்பது என்பது தொடர்பில் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையில் தொடர்ச்சியாக இரண்டு நாட்கள் சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது, ரணிலுக்கு வாக்களிக்க முடியாது என்ற ஒரே நிலைப்பாட்டில் பத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் இருந்தார்கள். சில பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளாது புறக்கணிப்போம் என்ற நிலைப்பாட்டை முன்வைத்தார்கள். ஆனால், நாட்டு மக்களின் கோரிக்கைக்கு மதிப்பளித்து ராஜபக்ஷர்கள் இல்லாத ஆட்சிக்கான நிலைப்பாடு எனும் நோக்கில் டலஸ் அழகப்பெருமவை ஆதரிப்பது என்று கூட்டமைப்பு இறுதியில் தீர்மானித்தது. அதனை டலஸ் [illegible] சஜித் பிரேமதாச கூட்டோடு இணைந்து படம் எடுத்து ஊடகங்களிடம் அறிவிக்கவும் செய்தது. ஆனால், அந்தப் படங்கள் வெளிவந்த சில நிமிடங்களிலேயே ரணிலுக்கு ஆதரவளிக்கும் நிலைப்பாட்டில், ரணில் அணியை கூட்டமைப்பின் பங்களிக்கட்சியின் தலைவர் ஒருவரும் அவரின் கட்சி உறுப்பினர்களும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியது வெளிவந்துவிட்டது.

ஜனாதிபதித் தெரிவு என்பது இரகசிய வாக்கெடுப்பு மூலம் நடத்தப்படும் ஏற்பாட்டை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட பல பாராளுமன்ற உறுப்பினர்களும் இருக்கிறார்கள். அதில், கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களும் அங்கம் வகிப்பது, வாக்கெடுப்பு இடம்பெறுவதற்கு முன்னாலேயே தெரியவந்துவிட்டது. கூட்டமைப்பின் நிலைப்பாட்டை மீறி, அதன் உறுப்பினர்கள் சிலர் வாக்களிக்கப் போவதாக ஊடகங்களில் செய்தி பரவியதும், கூட்டமைப்பின் தலைமை அஞ்சத் தொடங்கிவிட்டது. ஆனாலும், அவ்வாறான நிலையொன்று இல்லை என காட்டிக் கொண்டது. வாக்கெடுப்பு முடிந்து, ரணில் வெற்றிபெற்றதும் கூட்டமைப்பின் தீர்மானத்தினை அதனை கூடி எடுத்த உறுப்பினர்களில் குறைந்தது நான்கு பேராவது மதிக்காமல், ரணிலை ஆதரித்து வாக்களித்திருக்கிறார்கள் என்ற சந்தேகம் மேலும் வலுத்தது. அதனை, ரணில் அணியின் ஹரீன் பெர்னாண்டோ வெளிப்படுத்தினார். இதன் தொடர்ச்சியைத்தான் ரணில், கூட்டமைப்பினருடனான கடந்த வாரச் சந்திப்பின் போதும் செய்தார்.

தமிழ் மக்களின் பிரதான கட்சியாக ஒரு கட்டம் வரையில் தன்னை நிரூபித்து வந்த கூட்டமைப்பு, கடந்த சில ஆண்டுகளாக மிக மோசமான தரகு அரசியலை செய்வதாக குற்றச்சாட்டு மக்கள் மத்தியில் உண்டு. கூட்டமைப்பின் அங்கம் வகிக்கின்ற தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட் என்று எந்தக் கட்சியும் எந்தப் பாகுபாடும் இன்றி, தரகு அரசியலின் பங்காளிகாக மக்களை ஏமாற்றிப் பிழைக்கும் அரசியலை கூச்சமின்றி செய்து வருகிறார்கள். அதுதான், கடந்த பொதுத் தேர்தலில் மிக மோசமான பின்னடைவைச் சந்திக்கவும் காரணம். தேர்தல் முடிவுகளைப் பார்த்தாவது, கூட்டமைப்பின் தலைவர்கள், தங்களைத் திருத்திக் கொண்டு மக்களை நோக்கிய அரசியலுக்கு தங்களைத் தயார்ப்படுத்துவார்கள் என்று நம்பினால், அதில் அவர்களே நாளாந்தம் மண்ணை அள்ளிப்போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கூட்டமைப்பு இரா.சம்பந்தனின் காலத்துக்குப் பின்னரான காலத்தில் தமிழரசுக் கட்சி என்கிற ஒற்றைக் கட்சிக்குள் சுருங்கிவிடும் கட்டமும் வந்துவிட்டது. மாறாக, பங்காளிக் கட்சிகளுக்கு இடையில், ஒரு கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்றமை தொடர்பிலான ஒழுக்கம் ஏதும் இல்லை. அதனை, ஆரம்பித்து வைத்ததில் தமிழரசுக் கட்சியே பிரதான பங்கை வகித்தது. ஒரே கூட்டணிக்கு இருந்து கொண்டே பங்காளிக் கட்சியின் உறுப்பினரை திருடி தங்களின் கட்சி வேட்பாளராக அறிவித்தது முதல், தமிழரசுக் கட்சி கசடுத்தனமான அரசியலை செய்து வந்திருக்கிறது. அதனை, மாவை சேனாதிராஜா அரசியல் நெறியாகவே முன்னெடுத்து வந்திருக்கிறார். தங்களை விட்டால் யாரும் இல்லை என்ற நினைப்பில் தமிழரசுக் கட்சி கடந்த காலங்களில் ஆடிய ஆட்டத்திற்கு அந்தக் கட்சி சற்று பின்னடைவைச் சந்தித்ததுமே பங்காளிக் கட்சிகள் ஆட்டங்காட்டத் தொடங்கியிருக்கின்றன.

> கூட்டமைப்புக்குள் இருக்கும் கட்சிகளுக்கு காட்டிக் கொடுத்தல் என்கிற கடந்த கால கறுப்பு வரலாறு உண்டு

இன்றைக்கு, தமிழரசுக் கட்சி ஒரு பக்கத்திலும் ரெலொவும் புளொட்டும் இன்னொரு பக்கத்திலும் நின்று கூட்டமைப்பின் அரசியலைச் செய்கின்றன. அதிலும், தமிழரசுக் கட்சியில் இருக்கின்ற ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களுக்குள்ளேயே குறைந்தது மூன்று அணி இருக்கின்றது. இப்படியான நிலையில், கூட்டமைப்பினை மக்களை நோக்கி மீண்டும் நகர்த்திச் செய்வது என்பது எவ்வளவு அபத்தமான நம்பிக்கை. ரணில் - ராஜபக்ஷ கூட்டினை ஆதரித்து கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சிலர் அதற்கான சன்மானங்களை பெற்றுக் கொண்டதான தகவல் மக்களிடம் பரவியிருக்கின்றது. இந்த நிலையில், ஒவ்வொரு தரப்பினரும் தங்களுக்கு வெள்ளையடித்துக் கொள்ளும் ஆர்வத்தில் இருக்கிறார்கள். கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சிலர் தனக்கு வாக்களித்ததாக அவர்களின் முன்னாலேயே ரணில் கூறும்போது, அமைதியாக இருந்துவிட்டு வந்த சிலர், இன்றைக்கு ஒலிவாங்கிகளுக்கு முன்னால் நின்று தாங்கள் புலிகளின் வாரிசுகள் என்ற தோரணையில் முழங்குவதைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கின்றது.

சமாதானப் பேச்சுவார்த்தை எனும் போர்வையில் விடுதலைப் புலிகளை ரணில் துண்டாடினார். அதுதான், புலிகளை ராஜபக்ஷர்கள் அழித்து ஒழிக்க காரணமானது என்ற உணர்நிலையொன்று தமிழ் மக்கள் மத்தியில் உண்டு. அதனால்தான் ரணிலை நரி என்ற அடையாளப்படுத்தல் பலம்பெற்றது. கூட்டமைப்பினை பிரித்தாளுவதற்காக ரணில் இப்போது, கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மத்தியில் எண்ணெய் ஊற்றி அனுப்பியிருக்கிறார் என்ற வாதம் வைக்கப்படுகின்றது. பௌத்த சிங்கள அடிப்படைவாத அரசியலில் ஐம்பது ஆண்டுகளாக பயணிக்கும் ரணிலுக்கு கூட்டமைப்பினை பிரித்தாளும் தேவை இருக்கிறது. ஏனெனில், தமிழ் மக்கள் ஓரணியில் திரள்வது என்பது எப்போதுமே பௌத்த சிங்கள பேரினவாதத்துக்கு சிக்கலானது. அப்படியான நிலையில், ரணில் கூட்டமைப்பை பிரித்தாள நினைப்பார் என்பது தர்க்கரீதியிலானது. ஆனால், ரணில், அதனைச் செய்வதற்காக கூட்டமைப்பினருடனான சந்திப்பை பயன்படுத்திய போது, கலந்து கொண்ட உறுப்பினர்களில் ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் அமைதி காத்தது ஏன் என்பதுதான் முக்கிய கேள்வி. அத்தோடு, ரணில் பிரித்தாளும் கட்டத்தை முன்னெடுக்க முன்னரேயே கூட்டமைப்பு பல முனைகளில் துருத்திக் கொண்டு நிற்கத் தொடங்கிவிட்டது. அப்படியான நிலையில், ரணிலின் தந்திரத்துக்கு கூட்டமைப்பு ஆளாகக் கூடாது என்று மேம்போக்காக பேசிக் கடக்க முடியாது.

கூட்டமைப்பின் தலைவர்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தங்களுக்குள் யார் யார் விலை போனார்கள் என்பது தெளிவாக தெரியும். ஆனால், அதனை அவர்கள் முழுமையாக வெளிப்படுத்தவோ, கூட்டமைப்புக்குள் இருக்கும் கறுப்பு ஆடுகளை களை எடுக்கவோ விரும்பமாட்டார்கள். ஏனெனில், கூட்டமைப்பின் தலைவர்களில் பலரும் ஒவ்வொரு கட்டத்தில் கறுப்பு ஆடுகளாக வலம் வருபவர்கள். தற்போதையை கறுப்பு ஆடுகளை பகிரங்கப்படுத்தினால், பகிரங்கமாக்கப்பட்டவர்கள் வெளியே வந்து மற்றவர்களையும் காட்டிக் கொடுப்பார்கள் என்பது நிலை. ஏனெனில், கூட்டமைப்புக்குள் இருக்கும் கட்சிகளுக்கு காட்டிக் கொடுத்தல் என்கிற கடந்த கால கறுப்பு வரலாறு உண்டு. அப்படியான நிலையில், மக்களை ஏமாற்றும் கூத்துக்களை மாத்திரம் மேடைகளைப் போட்டு நிகழ்த்துவார்கள். தமிழ்த் தேசிய அரசியலை அயோக்கியர்களின் கூடாரமாக்கிவிட்டு கூட்டமைப்பு கலைந்து போகும் காலம் தொலைவில் இல்லை.



## வாழ்வியல் தரிசனம்

அழிவு சிருஷ்டியின் ஆரம்பம். அழிவு நடப்பதை எந்த ஆத்மாவும் விரும்ப மாட்டாது. ஆனால், இவை நடைபெற்றேயாக வேண்டும்.

புதிய உயிரினங்கள் புவனிக்குத் தேவைப்படுகின்றன. பழையதைக் கழைவது அல்ல. ஆனால், இவை மறைந்து போகாது விடின், புதுமையின் விஸ்பரூபங்களை பூமியால் காண முடியாது போய்விடும். கால மாற்றங்கள் எல்லாமே நல்லதும் அல்ல. இயற்கை தொலைவதை யார் தான் விரும்புவார்கள்? ஒன்று அகலும் போது பல உருவங்கள் உயிர்த்தெழந்தேயாக வேண்டும்.

கால மாற்றங்களை பழுதடையச் செய்வதும் இந்த மாந்தர்கள்தான். செய்யும் வினை மீளச் சூழும். ஆனால், எதனையும் சரிவரச் செய்யத்தயாராக இல்லை. எனவே, புதிய பூப்பதனால் அறிவு மேலோங்க நல்ல அனுபவம் மனிதர்களுக்கு ஏற்படலாம். ஏற்றுக்கொள்ள வேண்டிய தவறைஏற்பீர்களாக! மீண்டும் அதனைச் செய்யற்க!

பருத்தியூர் பாலவயிரவநாதன்

## கடிதங்கள்

### அவசரமான கோரிக்கை

மலையகத்தில் பல மாவட்டங்களிலும் கடந்த சில நாட்களாக பெய்த அடைமழை, மண்சரிவு, வெள்ளம் ஆகியவற்றின் காரணமாக, பாதிக்கப்பட்ட பலரும், தற்காலிக முகாம்களிலும், அயலவர்களின் வீடுகளிலும், உறவினர்களுடனும் தங்கியிருக்கின்றனர். இதனால், அன்றாடம் ஜீவியம் நடத்துவதில் பெரும் சிரமங்களுக்கு முகங் கொடுத்து வருவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

குடியிருப்புகள், சேதமடைந்து இருப்பதனாலும், தங்களுடைய குடியிருப்புகளை அண்மித்த பிர தேசங்களில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளதாலும், பாதிக்கப்பட்ட வீடுகளுக்குச் சென்று, அவற்றை புனர்நிர்மாணம் செய்து மீளக் குடியேற்றுவதிலும் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென பலராலும் அறிவிக்கப்பட்டது. எனினும், ஒரு சில அமைப்புகளைத் தவிர, அரசாங்க பக்கத்தில் இருந்து, நிவாரணங்கள் கிடைக்கவில்லை என குற்றஞ்சாட்டுகின்றனர்.

உடைமைகள் மட்டுமன்றி, முக்கியமான ஆவணங்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான சீருடைய உள்ளிட்ட அப்பியாச கொப்பிகள் மற்றும் பாடப்புத்தகங்களும், இயற்கை அனர்த்தங்களுக்குள் சிக்கிக்கொண்டுள்ளன. மாணவர்கள் சிலரும் பாடசாலைகளுக்குச் செல்வதிலும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

ஆகையால், தங்களுக்குத் தேவையான உடனடி உதவிகளை செய்துக்கொடுப்பதில் தீவிரமான அக்கறை காட்டவேண்டும் என்றும், சேதமடைந்த குடியிருப்புகளை மீளவும் புனர்நிர்மாணம் செய்துக்கொடுக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

சின்னத்தம்பி

லக்னோ

# சுதந்திர தினத்தில் தாக்குதல் திட்டம்

நாடு முழுவதும் சுதந்திர தின கொண்டாட்டங்களுக்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

இந்நிலையில், உத்தர பிரதேச பயங்கரவாத ஒழிப்பு படையினர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சுதந்திர தினத்தில் சக்தி வாய்ந்த வெடிகுண்டு தாக்குதல் நடத்த திட்டமிட்ட ஐ.எஸ்.ஐ.எஸ். தொடர்புடைய பயங்கரவாதியை கைது செய்துள்ளோம் என தெரிவித்து உள்ளது.

கைது செய்யப்பட்டவர் அகில இந்திய மஜ்லிஸ்-இ-இத்திஹாதுல் முஸ்லிமீன் அமைப்பின் உறுப்பினராகவும் இருந்துள்ளார். ஆசம்கார் மாவட்டத்தின் முபாரக்பூர் நகரில் அமிலோ என்ற பகுதியில் வசித்து வந்துள்ளார்.

வாட்ஸ்அப் உள்ளிட்ட சமூக ஊடக தளங்களில் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத இயக்கம் பற்றி பிரசாரம் செய்து வந்ததுடன்,



அந்த இயக்கத்தில் இணையும்படி மக்களை ஈர்க்கும் வேலையிலும் ஈடுபட்டு வந்துள்ளார்.

அவரது கையடக்க தொலைபேசியில் சோதனையில், நாட்டில் பயங்கரவாத மற்றும் வன்முறை செயல்களில் ஈடுபட முஸ்லிம் இளைஞர்களை வசீகரிக்கும் நோக்கிலான, ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பின் சமூக ஊடகத்துடனும் தொடர்பில் இருந்துள்ளார்.

சிரியாவில் உள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதியின் தொடர்பு எண்ணையும் கொடுத்துள்ளார். காஷ்மீரில் முஸ்லிம்கள் மீது நடந்த அராஜகங்களுக்கு பழிவாங்கும் நோக்கில், ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் இணைந்து சக்தி வாய்ந்த வெடிகுண்டு எப்படி தயாரிப்பது என்றும் கற்று கொண்டார்.

சமூக ஊடக செயலி வழியே, கையெறி குண்டுகள், வெடிகுண்டுகள் மற்றும் சக்தி வாய்ந்த வெடிகுண்டுகள் தயாரிப்பது பற்றிய பயிற்சியையும் அவர் எடுத்துக்கொண்டுள்ளார் என விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன் சுதந்திர தினத்தன்று தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது. அதனையடுத்து பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

ஈரோடு

# "வாம்மா நீ தான் என் தங்கச்சி"

## தூய்மை தொழிலாளியை ஆரத்தழுவிய வடிவேலு

ஈரோடு, சத்தியமங்கலம் அருகே பண்ணாரியில் பிரசித்தி பெற்ற மாரியம்மன் கோவில் உள்ளது. இந்த கோவிலுக்கு சினிமா நடிகர் வடிவேலு நேற்று முன்தினம் மாலை 3.15 மணிக்கு காரில் வந்தார்.

பின்னர் அவர் காரை விட்டு இறங்கி கோவிலுக்கு சென்று அம்மனை பயபக்தியுடன் தரிசனம் செய்து விபூதியை வாங்கி நெற்றில் பூசிக்கொண்டார். பின்னர் அவர் அங்கிருந்துவெளியேறி கோவிலில் உள்ள அலுவலகத்தில் உட்கார்ந்து கொண்டார்.

பண்ணாரி அம்மன் கோவிலுக்கு சினிமா நடிகர் வடிவேலு, வந்த தகவல் பக்தர்களுக்கு உடனடியாக தெரியவில்லை. சிறிது நேரம் கழித்து தான் பக்தர்களுக்கு தெரியவந்தது. உடனே அவரை பக்தர்கள் சூழ்ந்து கொண்டனர்.



உடனே அவருடன் பக்தர்கள் பலர் புகைப்படம் எடுத்துக்கொண்டனர். அப்போது அங்கு கோவிலில் துப்புரவு வேலையில் ஈடுபட்டு கொண்டிருந்த பெண் ஒருவர் தயங்கிபடி வந்து வடிவேலுவின் காலில் விழுந்து வணங்கினார்.

உடனே அந்த பெண்ணை தூக்கி விட்டதுடன், நன்றாக இருங்கள் என அவரை வாழ்த்தினார். மேலும் அந்த பெண்ணை "வாம்மா நீ தான் என் தங்கச்சி" எனக்கூறியபடி, ஆரத்தழுவி தோளில் கை போட்டு புகைப்படம் எடுத்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டு சென்றார்.

இந்தியா



# பிளாஸ்டிக் கழிவுகளால் காந்தி சிலை தயாரிப்பு

வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் 80 ஆவது ஆண்டு விழாவையொட்டி உ.பி., மாநிலம் நொய்டாவில், 20 அடி உயர மகாத்மா காந்தியின் சிலையொன்று திறக்கப்பட்டது. சத்தியாகிரகத்தை தலைமை ஏற்று அணிவகுத்துச் சென்ற காந்தியின் சிலை மறுசுழற்சி செய்யப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகளால் ஆனது என்பதுதான் இதன் சிறப்பாகும்.

மகாத்மா காந்தி, ஒரு சுதந்திர இந்தியாவை மட்டுமல்ல, தூய்மையாகவும் உண்மையாகவும் இருக்கும் பாரதம் வேண்டும் என்றும் எண்ணினார். அவரது எண்ணம் போலவே தூய்மை பாரதத்தின் ஓர் அங்கமாக இச்சிலையைச் செய்துள்ளனர்.

தேசத் தந்தையின் சிலையை நொய்டா நிர்வாகம் HCL உடன் இணைந்து நகரைச் சுற்றி சேகரிக்கப்பட்ட 1,000 கிலோ பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி உருவாக்கியது. 20 அடி உயரம், 6 அடி நீளம், 6 அடி அகலம் கொண்ட 1,150 கிலோ fpuhk; எடை கொண்ட சிலையை திறந்து வைத்தனர்.

புதுடெல்லி

# பிரதமர் மோடியின் சொத்து அதிகரிப்பு

பிரதமர் அலுவலக இணையதளத்தில், பிரதமர் நரேந்திர மோடியின் சொத்து விவரங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. அதில் கூறியிருப்பதாவது

பிரதமர் நரேந்திர மோடியின் சொத்து மதிப்பு கடந்த ஓராண்டில் ரூ.26.13 இலட்சம் அதிகரித்து, 2022, மார்ச் 31ம் திகதிய நிலவரப்படி ரூ.2,23,82,504-ஆக உள்ளது. பிரதமர் மோடி, குஜராத் முதல்வராக இருந்தபோது, கடந்த 2002 ஆம் ஆண்டு வீட்டு மனை ஒன்றை, நான்கு பேருடன் சேர்ந்து வாங்கினார்.

அதில் இவரது பங்கு 25 சதவீதம். ரூ.1.1 கோடி மதிப்பிலான அந்த இடத்தை பிரதமர் மோடி தானமாக



அளித்துவிட்டார். அதனால் அவரிடம் தற்போது அசையா சொத்துகள் எதுவும் சொந்தமாக இல்லை எனக் கூறப்பட்டுள்ளது..

பிரதமரிடம் ரொக்கம் ரூ.35,250 உள்ளது. அவர் தபால் அலுவலகத்தில் வைத்துள்ள தேசிய சேமிப்பு சான்றிதழ்கள் மதிப்பு ரூ.9,05,105. அவர் வைத்திருக்கும் ஆயுள் காப்பீடுகளின் மதிப்பு ரூ.1,89,305 என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெங்களூரு

# முஸ்லிம்கள் இல்லாத ஊரில் முஹர்ரம் அனுசரிக்கும் இந்துக்கள்

முஹர்ரம் மாதத்தின் 10 ஆம் நாளில் ஷியா, சன்னி முஸ்லிம்கள் முஹர்ரம் நோன்பு அனுசரிக்கிறார்கள்.

இந்நிலையில், கர்நாடக மாநிலம் பெலகாவி மாவட்டம் ஹிரேபிதனூர் கிராமத்தில் இந்து மக்களும் 100 ஆண்டுகளுக்கும் மேலாக முஹர்ரம் அனுசரித்து வருகின்றனர். சுமார் 3 ஆயிரம் பேர் வசிக்கும் இந்த கிராமத்தில் ஒரு முஸ்லிம்கூட இல்லை. ஆனால் அங்குள்ள இந்து மற்றும் கிறிஸ்தவ மக்கள் ஒவ்வோர் ஆண்டும் முஹர்ரம் மாதத்தில் 5 நாட்கள் நோன்பு அனுசரிக்கின்றனர்.

கர்நாடகாவில் இந்து - முஸ்லிம் மக்களிடையே மோதல் சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில், இந்து மக்கள் முஹர்ரம் அனுசரிக்கும் நிகழ்ச்சியின் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளன.



திருக்கழுக்குன்றம்

# ஆன்மீக ஆட்சிக்காக பா.ஜ.க போராடுகிறது

இருப்பவையை இல்லாதவருக்கு பகிர்ந்தளிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுவதே ஆன்மீக ஆட்சி. அத்தகைய ஆன்மீக ஆட்சியை அமைக்கவே பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க) போரடிக் கொண்டிருக்கிறது என்று தமிழக பா.ஜ.க., தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

திருவாசகம் முற்றோதல் புகழ் சிவனடியார் சிவதாமோதரனை தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை மரியாதை நிமித்தமாக அவரது இல்லத்தில் நேரில் சந்தித்து பேசினார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

அனைவருக்கும் அனைத்தும் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் நமது குருமார்கள், தமிழகத்தில் ஆன்மீக ஆட்சி வரவேண்டும் எனக் கூறுகிறார்கள். ஆன்மீக ஆட்சி என்பது கோவிலில் நித்தியப்பூஜை செய்வது கிடையாது. அது ஆன்மீக ஆட்சியில் ஒரு பங்கு அவ்வளவுதான் என்றார்.



# சப்பரத் திருவிழா

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பகுதியில் அமந்திருந்து அடியவர்களுக்கெல்லாம் அருள்பாலிக்கின்ற புதுக்குடியிருப்பு கந்தசாமி ஆலயத்தின் உடைய வருடாந்த மகோற்சவம் இடம்பெற்று வருகிறது அந்த வகையில் நேற்று முன்தினம் (09) சப்பரத் திருவிழா மிகவும் சிறப்பாக இடம் பெற்றது (சண்முகம் தவசீலன்)







# உதவிக்கரம்

கொழும்பு, ஆமர் வீதி மெல்வத்த பிளேஸ் சலவை கைத்தொழில் செய்யும் 40 மேற்பட்ட குடும்பங்களுக் வீட்டு விவசாயத்தை ஊக்குவிக்கும் முகமாக மரக்கறி பயிர் விதைகள் மற்றும் பூந்தொட்டிகள் வழங்கப்பட்டது. இவை, லயன்ஸ் கழகம் COLOMBO OCEAN CITY 306B2 கழக தலைவர் பெ.ராஜேந்திரன் அனுசரணையில் ஞாயிறன்று வழங்கிவைக்கப்பட்டன.



















# காட்டுப் பாதை மூடப்பட்டது

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காமம் கந்தன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவத்திற்கான தீர்த்தம் 12ஆம் தேதி வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளது.

கடந்த மாதம் 29ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி கடந்த 15 நாட்களாக திருவிழா பெரஹர ஊர்வலம் நடைபெற்றுவந்தது.

இதேவேளை, கதிர்காம காட்டுப்பாதை மூடப்பட்டுள்ளது. கடந்த யூலை மாதம் 22 ஆம் திகதி திறக்கப்பட்டு ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி மூடப்பட்டது. இம்முறை 29 ஆயிரத்து 694 பேர் காட்டுப் பாதையால் பயணித்திருக்கிறார்கள். (சகா)





# வரவழைத்தல்

எரிபொருள் பிரச்சனையை மையப்படுத்தி பாடசாலைக்கு ஆசிரியர்களையும், மாணவர்களையும் வரவழைத்தல் எனும் விழிப்புணர்வு வேலைத்திட்டத்தை மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி தேசிய பாடசாலை மற்றும் மட்டக்களப்பு வின்செண்ட் உயர்தரப் பெண்கள் பாடசாலைகளில் கல்வி பயிலும் 2021மற்றும் 2022 ஆண்டுக்கான உயர்தர மாணவர் தலைவர்களின் ஏற்பாட்டில் மாபெரும் விழிப்புணர்வு சைக்கிளோட்டமொன்று மாணவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி அதிபர் தலைமையிலான நிர்வாகமும்,பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் மற்றும் வின்சன்ட் உயர்தரப் பெண்கள் பாடசாலையின் அதிபர் தலைமையிலான நிருவாகத்தினர் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் அனுசரணையுடன் விழிப்பூட்டும் சைக்கிளோட்டம் கடந்த திங்கட்கிழமை காலை 7.30 மணியளவில் பாடசாலைக்கு முன்பாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

(ஏ.எச்.ஏ. ஹுஸைன் )

# பயிற்சிப்பட்டறை



கெல்விட்டாஸ் மற்றும் GCERF நிறுவனங்களின் நிதி அனுசரனை மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தேசிய செயலகத்தின் பங்குபற்றலுடன் AMCOR தேசிய தன்னார்வ தொண்டு நிறுவனத்தினால் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களுக்கிடையில் அமுல்படுத்தப்படும் 'இளைஞர்கள் மத்தியில் வன்முறை தீவிரவாதத்தை இல்லாதொழித்தல்' எனும் வேலைத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான திறன் விருத்தி செயற்பாடுகள் உட்பட பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அதன் முதற்கட்டமாக கடந்த தெரிவு செய்யப்பட்ட 20 மாணவர்களுக்கான மூன்று நாள் வதிவிட பயிற்சிப்பட்டறை தன்னாமுனை மியானி மண்டபத்தில் வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

( ஏ.எச்.ஏ. ஹுஸைன் )







தென்கொரியா

தென்கொரியாவில் 80 ஆண்டுகளில் இல்லாத கனமழை

# 9 பேர் உயிரிழப்பு

தென்கொரியாவில் கடந்த 80 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கடந்த சில நாட்களான கனமழை பெய்து வருகிறது.
குறிப்பாக தென்கொரியாவின் தலைநகர் சியோல் மற்றும் அதனை சுற்றியுள்ள இன்சியோன், கியோங்கி ஆகிய மாகாணங்கள் இக் கனமழையழனால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் பெரிதும் பாதிப்படைந்துள்ளன.
நூற்றுக்கணக்கான வீடுகள், மெட்ரோ ரெயில் நிலையங்கள் மற்றும் வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதோடு, பல நகரங்களில் மின்சாரமும் துண்டிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்நிலையில் இக் கனமழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சிக்கி 9 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் , 6 பேர் மாயமாகி உள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலும் படுகாயம் அடைந்த 14 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.





# ஓய்வு பெறவுள்ள செரீனா வில்லியம்ஸ்

டென்னிஸிலிருந்து ஓய்வு பெறப்போவதாக 23 தடவைகள் கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்ற செரீனா வில்லியம்ஸ் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார்.
ஐக்கிய அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரைத் தொடர்ந்து டென்னிஸிலிருந்து மேம்படவுள்ளதாக 40 வயதான வில்லியம்ஸ் தெரிவித்துள்ளார்.
தனக்கு முக்கியமான ஏனைய விடங்களை நோக்கி நகருவதாக ஐ. அமெரிக்காவின் வில்லியம்ஸ் குறிப்பிட்டதுடன், ஓய்வு என்ற வார்த்தையை தான் விரும்பவில்லை எனக் கூறியுள்ளார்.
நீண்ட காலமாக காயம் காரணமாக விளையாடமலிருந்த வில்லியம்ஸ், இவ்வாண்டு ஜூன் மாதத்தில் விம்பிள்டன் தொடரிலேயே தனிநபர் போட்டிகளுக்குத் திரும்பியுள்ளார்.
பகிரங்க காலத்தில் வில்லியம்ஸே அதிக தனிநபர் பட்டங்களை வென்றதுடன், மார்கரெட் கோர்ட்டின் அதிகமான 24 பட்டங்களை விட ஒரு பட்டமே குறைவாகப் பெற்றுள்ளார்.
தான் எட்டு வாரங்கள் கர்ப்பமாக இருக்கும்போது 2017ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய பகிரங்கத் தொடரையே இறுதியாக வில்லியம்ஸ் வென்றிருந்தார்.



அமெரிக்கா

# செவ்வாய் கிரகத்தில் நூடில்ஸ் ?

செவ்வாய்க் கிரகம் குறித்து அண்மையில் நாசா வெளியிட்ட புகைப்படமொன்றில், நூடில்ஸ் போன்று மஞ்சள் நிறத்தில் மர்மப் பொருள் ஒன்று காணப்படுவது மக்கள் மத்தியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.
இந்நிலையில், குறித்த பொருள் என்ன என்பது பற்றி, விளக்கம் ஒன்றை நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.
'ரோவர் ஆரம்பத்தில் செவ்வாய் கிரகத்தில் சென்ற சமயத்தில், அதில் பொருத்தப்பட்ட போர்வையின் ஒரு நூல் தான் ' குறித்த மஞ்சள் நிறப் பொருள் எனத் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கா

# திருடப்பட்ட சிலை கண்டுபிடிப்பு

தமிழ்நாட்டில் இருந்து 50 வருடங்களுக்கு முன்னர் திருடப்பட்ட சிலையானது தற்போது அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
தமிழ்நாட்டின் கும்பகோணம் மாவட்டம் தண்டன் தோட்டம் பகுதியில் நந்தனபுரீஸ்வரர் என்னும் சிவன் கோயில் அமைந்துள்ளது.
இக் கோயிலில் இருந்து 1971 ஆம் வருடம் கடவுள் பார்வதியின் சிலை உட்பட ஐந்து சிலைகள் திருடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இதனையடுத்து இச்சம்பவம் குறித்து கடந்த 2019 ஆம் வருடம் கோயில் அறங்காவலர் தமிழ்நாடு சிலை கடத்தல் தடுப்புப் பிரிவினருக்கு புகார் அளித்துள்ளார். அவர் அளித்த புகாரை தொடர்ந்து வழக்கு பதிவு செய்து சிலை கடத்தல் தடுப்பு பிரிவு பொலிஸார் கடத்தப்பட்ட சிலைகள் எங்கு எடுத்து செல்லப்பட்டது என்பது பற்றி விசாரணை மேற்கொண்டு வந்தனர்.
இதன் போது குறித்த பார்வதியின் சிலை பிரித்தானியாவைத் தலைமை இடமாகக் கொண்டு அமெரிக்காவின் நியூயார்க்கில் கிளையை கொண்டுள்ள பொன்ஹம்ஸ் என்னும் சர்வதேச ஏல நிறுவனத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருப்பது இந்திய பொலிஸாருக்குத் தெரிய வந்துள்ளது.
இதனையடுத்து ஏல நிறுவனத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கின்ற அந்த சிலையை மீண்டும் நந்தனபுரீஸ்வரர் கோவிலுக்கு கொண்டுவர தமிழ்நாடு சிலை கடத்தல் தடுப்பு பிரிவு பொலிஸார் தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# செல்சியிலிருந்து வேர்னரை மீளக் கைச்சாத்திட்ட லெய்ப்ஸிக்

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமனா செல்சியின் முன்களவீரரான திமோ வேர்னரை, ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான ஆர்.பி லெய்ப்ஸிக் மீளக் கைச்சாத்திட்டுள்ளது.
லெய்ப்ஸிக்கிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் செல்சிக்குச் சென்றிருந்த 26 வயதான வேர்னரை, நான்கு ஆண்டுகள் ஒப்பந்தத்தில் லெய்ப்ஸிக் மீளக் கைச்சாத்திட்டுள்ளது.
செல்சிக்காக 89 போட்டிகளில் 23 கோல்களையே பெற்றிருந்த வேர்னர், லெய்ப்ஸிக்காக 159 போட்டிகளில் 95 கோல்களைப் பெற்றிருந்தார்.




# போல்டை ஒப்பந்தத்திலிருந்து விடுவிக்கும் நியூசிலாந்து

நியூசிலாந்தின் வேகப்பந்துவீச்சாளரான ட்ரெண்ட் போல்டை, அவரது ஒப்பந்தத்திலிருந்து விடுவிப்பதற்கு அந்நாட்டு கிரிக்கெட் சபை இணங்கியுள்ளது.
தனது குடும்பத்துடன் மேலதிக நேரத்தை செலவிடுவதற்காகவும், இருபதுக்கு □ 20 தொடர்களில் பங்கேற்பதற்காகவும் தன்னை ஒப்பந்தத்திலிருந்து விடுவிக்குமாறு 33 வயதான போல்ட் கோரியமையைத் தொடர்ந்தே அவரை ஒப்பந்தத்திலிருந்து நியூசிலாந்து விடுவித்துள்ளது.
எவ்வாறெனினும், சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு □ 20 உலகக் கிண்ணத் தொடருக்கு பெரும்பாலும் போல்ட் தெரிவு செய்யப்படுவார் எனவும், மேற்கிந்தியத் தீவுகள் சுற்றுப்பயணத்தில் பங்கேற்பார் எனவும் நியூசிலாந்து கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்றதிகாரி டேவிட் வைட் தெரிவித்துள்ளார்.

ஜேர்மனி




# அதிர்ஷ்ட இலாபத்தை கிழித்து வீசிய கிழவி

ஜேர்மனியைச் சேர்ந்த 63 வயதான மூதாட்டி ஒருவர், அதிர்ஷ்ட இலாபச் சீட்டில் தான் வெற்றிபெற்ற மொத்தப் பணத் தொகையையும் கழிவறையில் கிழித்து வீசிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
ஜேர்மனியின் எஸ்ஸன் நகரைச் சேர்ந்த ஏஞ்செலா மேயர் எனப்படும் குறித்த மூதாட்டிக்கு அதிஷ்ட இலாபச் சீட்டின் மூலம் 330,000 யூரோக்கள் கிடைத்துள்ளன.
இதனையடுத்துத் தனக்குப் பரிசு விழுந்ததைக் கொண்டாட நினைத்த அவர் அளவுக்கு அதிகமாக மது அருந்தியுள்ளார்.
இந்நிலையில் போதையில் வீட்டுக்கு திரும்பிய நேரத்தில் அவருக்கு, இறந்துபோன அவருடைய கணவரைக் கவனித்துக்கொண்ட முதியோர் இல்லத்தில் இருந்து ஒரு கடிதம் வந்துள்ளது.
குறித்த கடிதத்தில் "உங்கள் கணவரைப் பராமரித்ததற்கான கட்டணம் நிலுவையில் உள்ளது எனவும், அதனை உடனடியாகச் செலுத்துமாறும் தெரிவிக்கப்பட்டிருந்துள்ளது.
' தனக்கு லொட்டரியில் பணம் கிடைத்ததை அறிந்துகொண்டுதான் முதியோர் இல்லம் இப்படியான முடிவில் இறங்கியுள்ளது ' என நினைத்த அவர் ஆத்திரத்தில் தன்னிடம் இருந்த மொத்தப் பணத்தையும் கிழித்து வீட்டில் இருந்த கழிவறையில் வீசியுள்ளார்.

நேபாளம்

# மணமேடையில் சண்டையிட்ட தம்பதிகள்



மணமேடையில் வைத்து புதுமண தம்பதிகள் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்ட சம்பவம் நேபாளத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
காட்மாண்டூரில் இடம்பெற்ற திருமணவிழாவொன்றிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.
இது குறித்து இன்ஸ்டாகிராமில் பகிரப்பட்ட வீடியோவில் 'பாரம்பரிய திருமண உடையில் மணமகனும், மணமகளும் மேடையில் அமர்ந்திருப்பது போன்றும்,. சில நிமிடங்களுக்குப் பிறகு, தம்பதிகள் ஒருவருக்கொருவர் உணவளிக்கும் சடங்கைத் தொடங்கியவுடன், அவர்கள் உடல் ரீதியாக ஒருவரையொருவர் தள்ளுவதும் இழுப்பதுமாக இருந்துள்ளனர். இதனால் கோபமடைந்த இருவரும் தொடரந்து ஒருவருக்கொருவர் தாக்கி சண்டையிடுவது போன்று " உள்ளது.
இந்நிலையில் சமூக வலைதளங்களில் வைரலான இவ் வீடியோவானது 70,000க்கும் அதிகமான லைக்குகளை குவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை தேசிய அணிக்கு மூவர் தெரிவாகினர்


■ எப். முபாரக்

இலங்கையில் எதிர்வரும் அடுத்த மாதம் ஐந்தாம் திகதி தொடக்கம் 14ஆம் திகதி வரை□நடைபெறவுள்ள தெற்காசிய கால்பந்தாட்டச் சம்மேளன 17 வயதுக்குட்ப்பட்டோருக்கான சம்பியன்ஷிப் தொடரில், இலங்கையின் 17 வயதுக்குட்பட்ட தேசிய அணிக்கு அல் அக்ஸா தேசிய பாடசாலையில் இருந்து மூன்று மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
இதில், ஏ.எம். சம்மி (தரம் 11), எம்.எஸ். எம். முபாஸ் (தரம் 10), கே.எம். ஹிப்னி (தரம் 10) ஆகிய மூன்று மாணவர்களுமே தேசிய போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.




# டிசெம்பரில் ஆரம்பிக்கவுள்ள எல்.பி.எல்

இலங்கையின் உள்ளூர் இருபதுக்கு □ 20 தொடரான லங்கா பிறீமியர் லீக்கானது (எல்.பி.எல்) இவ்வாண்டு டிசெம்பர் மாதம் இடம்பெறவுள்ளது.
ஆரம்பத்தில் இம்மாதம் நடைபெறவிருந்த எல்.பி.எல்லின் மூன்றாவது பருவகாலமானது, நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த மாதம் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.
இந்நிலையிலேயே, எல்.பி.எல்லானது இவ்வாண்டு டிசெம்பர் ஆறாம் திகதி முதல் 23ஆம் திகதி வரையில் நடைபெறும் என தொடரின் ஒழுங்கமைப்பாளர் சமந்த டொடன்வெல தெரிவித்துள்ளார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 11 ஒகஸ்ட் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.